திருவள்ளுவர் ஆண்டு 2040

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 52 பகுதி : 10 | ஆகஸ்ட் - 09 | விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

# ஈடிலா இல்லறம் !

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

எழில்குலுங்கும் ஸ்காட்லாந்தைக் காண்பதற்கே
        என்மனைவி யுடன்நானும் சென்றி ருந்தேன்.
பழகியஎன் மகனிடத்தில் ஏதோ கேட்கப்
        பக்கஇல்ல ஆங்கிலப்பெண் ஒருத்தி வந்தாள்;
வழக்கம்போல், "இவர்களென்றன் பெற்றோர்!" என்றே
        வந்தர்க்கே அறிமுகத்தைச் செய்தான் மைந்தன்;
இழையோடும் நகையோடு, "நலமா?" என்றே
        ஏந்திழையாள் என்துணைவி அருக மர்ந்தாள்!

"ஒருகேள்வி கேட்பதற்கே மன்னி யுங்கள்;
        உடன்வந்த இக்கணவ ருடனே தாங்கள்
ஒருங்கிணைந்தே எத்தனைநாள் வாழ்ந்தீர்?" என்றாள்.
        உடனடியாய் என்துணைவி, "எங்கள் வாழ்க்கைப்
பெருவாழ்வும் நாற்பத்தைந் தாண்டாய்!" என்றார்.
        பெண்அவளும் 'எத்தனைநாள் இன்னும் இந்த
ஒரேகணவ ருடன்வாழ்வீர்?" என்றாள். "எங்கள்
        உயிர்அடங்கும் வரை!" என்றார் என்றன் இல்லாள்!

தூய்மைமிகு திருமணத்தில், இல்ல றத்தில்
        துளியளவும் நம்பிக்கை இலாத தாலே
போய் இணைந்தே வாழுகின்றார் ஆணும் பெண்ணும்;
        புளித்துவிட்டால் பிரிகின்றார்; இந்த நாளில்
சேய்பிறந்தால் அதன்வாழ்வும் இருட்டே! இந்தச்
        சேதியெலாம் திரட்டியபின் உரத்துச் சொல்வேன்:
"வாய்மைமிகு நம்குடும்பக் கட்ட மைப்பே
        வையத்தின் வழிகாட்டி! மறுப்போர் உண்டா?"

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 52
பகுதி : 10
ஆகஸ்ட் 2009

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2040



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

முகவை மன்னர் நா.குமரன் சேதுபதி
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

இதழ்மணம் 3

பழந்தமிழிலக்கியங்களில்
பெண்ணுரிமைச் சிந்தனைகள் 4
முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

நத்தும் போல் 10
திருவறக் கவிஞர் புலவர் தோ. ஜம்புகுமாரன்

மதுரை - கூடல் - சொல்லாய்வு 12
முனைவர் சு. காளிமுத்து

புறநானூறும் - சிலப்பதிகாரமும் 15
பி. தளம்

அப்பொடு கலந்த உப்பு 19
ஆறுவிரல் ஐம்பொறி

தொல்காப்பியரின் நோக்கியல்
திறனாய்வுக் கொள்கை 21
உ. சண்முகநாதன்

இலக்கிய வகை வளர்ச்சி நோக்கில்
புறநானூறு நான்மணிக்கடிகை வாழ்க்கை
நெறிக்கருத்துக்கள் 26
முனைவர் கி. இராசா

தமிழ் இலக்கியத்தில் அன்புநெறி 35
பேராசிரியர் பா.வளன் அரசு

# இதழ் மணம்

வாசகர்கள் அனைவருக்கும் 62வது சுதந்திர தின விழா வாழ்த்துக்கள்.

சுதந்திர தின விழா கொண்டாடப்படும் இத்தருணத்தில், பெண்களின் உண்மையான சுதந்திரத்திற்கு விழிப்புணர்ச்சியூட்டும் வகையில் முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம் அவர்களின் பழந்தமிழிலக்கியங்களில் பெண்ணுயர்வுச் சிந்தனைகள் என்னும் கட்டுரை முதல் கட்டுரையாக அமைந்திருப்பது சாலப்பொருத்தமுடையதாக அமைந்துள்ளது.

இதழில் வெளிவந்துள்ள கட்டுரைக்குத் தொடர்விளக்கம் அமையும் வண்ணம் கட்டுரைகள் (சான்று நத்தம் போல்) வெளிவரத் தொடங்கியுள்ள நிலை, தர்க்கமுறை ஆய்வரங்கத்தை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது பேருவகை நல்குகிறது.

தென்மதுரையாம் நம் மதுரை நகருக்கு அமைந்துள்ள கூடல் என்னும் சிறப்புப் பெயரை ஆழ்ந்து ஆராய்ந்து விளக்கியுள்ளார் முனைவர் கா. காளிமுத்து.

தொன்மை இலக்கியங்களாம் புறநானூறு மற்றும் சிலப்பதிகாரத்தில் அமையப்பெற்றுள்ள இரு பொதுமைக்கூறுகளை பி. தனம் அவர்கள் சிறந்த முறையில் புலப்படுத்தியுள்ளார்.

தமிழ் இலக்கண, இலக்கியங்களில் அறிவியல் உண்மைகளை வெளிப்படுத்தியுள்ள பாங்கினை ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் சிறந்த முறையில் எடுத்துக்காட்டியுள்ளார். தொல்காப்பியரின் திறனாய்வுக் கொள்கைகளுள் நோக்கு என்னும் கொள்கையைச் சீரிய முறையில் ஆராய்ந்து ஆய்வாளர் உ.சண்முகநாதன் வெளிப்படுத்தியுள்ளார்.

வாழ்விற்கு வழிகாட்டியாக விளங்கும் வாழ்க்கை நெறிகள் பழந்தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளமையை முனைவர் கி. இராசா அவர்கள் சிறப்புற எடுத்துக்காட்டியுள்ளார்.

மனிதகுலப் பண்புகளுள் முதன்மையாகத் திகழும் அன்புநெறி தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்று மக்களுக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்வதை பேரா. பா. வளன்அரசு அவர்கள் சீரிய முறையில் வழங்கியுள்ளார்.

தமிழ்கூறும் நல்லுலகிற்குச் சிறந்த கதிரவனாக இம்மாத இதழ் அமைந்து மனநிறைவை வாசகர்கட்கு நல்கட்டும்.

–முனைவர் க. சின்னப்பா

# பழந்தமிழிலக்கியங்களில் பெண்ணுயர்வுச் சிந்தனைகள்

முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர் வந்த சங்க காலத்தில், ஆண்களைப் போல் பெண்களும் உரிமை வாழ்வு பெற்றிருந்தனர். குறுந்தொகையின் 'யாயும் ஞாயும் யாராகியரோ' பாடல், தனக்குரிய கணவனைத் தெரிவுசெய்வதில், பெண்களுக்கிருந்த உரிமையைக் காட்டுகிறது. களவியல் இலக்கண அமைப்பும், குறிஞ்சித் திணைப்பாடல்களும், தமக்குரிய மணவாழ்வை முடிவு செய்வதில் சங்ககாலப் பெண்களுக்கு இருந்த சம உரிமையைத் (உடன் போக்கு) தெளிவுபடுத்துகின்றன. சங்ககாலப் பெண்பாற் புலவர்களான ஔவையார், நச்செள்ளையார், வெள்ளிவீதியார், முடத்தாமக்கண்ணியார் ஆகியோரின் படைப்புகள், பெண்கள் சங்ககாலத்தில் சிறந்த கல்வியறிவும் முதன்மையும் பெற்றிருந்தனர் என்பதைக் காட்டுகின்றன.

பண்டைய தமிழகத்தில் மக்களுக்கு மணம் முடித்து வைப்பதில் தாய்க்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. சங்க காலத்தில் கூட்டுக்குடும்பமுறை இல்லாமல் பெண் தனியே குடித்தனம் நடத்தி இருப்பதும் எண்ணத்தக்கது. தலைமகன், தலைவன், கிழவோன் என்ற சொற்களுக்குச் சமமானவைகளாகத் தலைமகள், தலைவி, கிழத்தி என்று சுட்டப்பட்டிருக்கிறது. கணவனை முன்னிறுத்தி மனைவியைச் சுட்டிக்காட்டும் பிற்கால மரபிற்கு மாறாக, மனைவியை முன்னிறுத்திக் கணவன் சுட்டப்பட்டமை எண்ணத்தக்கது. புறநானூற்றில் 'செயிர்த்தீர் கற்பின் சேயிழை கணவ' என்றும், பதிற்றுப்பத்தில் 'சேணாறு நறுநுதல் சேயிழை கணவ' என்றும் புறநானூற்றில் மனைவிக்கு விளக்காகிய 'வாள்நுதல் கணவ' என்றும் பெண்களை முதன்மைப்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது.

மனித நாகரிகத்தின் வரலாற்றில் அரசுகள் தோன்றுவதற்குமுன் ஆண் பெண் வேறுபாடின்றி மக்கள் குழுக்களாக வாழ்ந்த காலத்தில் பெண்ணே தலைமைப்பெற்று விளங்கினாள். போர், வேட்டையாடுதல், சேகரித்த உணவைப் பங்கீடு செய்தல், குழந்தைகளைப் பெற்று வளர்த்தல் முதலிய

அனைத்துச் சமூகப் பணிகளுக்கும் தாய் தலைமை ஏற்று நடத்தினாள். எனவே, 'சங்க இலக்கியக் கால மரபைச் சங்க இலக்கிய முற்கால மரபென்றும் பிற்கால மரபு என்றும் பிரித்துக் கொள்ளலாம். முற்கால மரபு பெண் உரிமையைப் போற்றிய மரபென்றும் பிற்கால மரபு பெண் உரிமையை நெகிழச் செய்த மரபென்றும் கொள்ளலாம்' என்று க.ப. அறவாணன் கூறுவதை இங்கு ஒப்புநோக்கலாம். அறிஞர் பிரடெரிக் எங்கெல்ஸ் தம்முடைய 'குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்ற நூலில் மோர்கன் *(Morgon ),* பேக்கோபென் *(Bachofen)* ஆகிய இரு அறிஞர்களின் மானுடவியல் கண்டுபிடிப்பை அடித்தளமாகக் கொண்டு, மனிதகுல வரலாற்றின் தொடக்கத்தில் பெண் எய்தியிருந்த முதன்மையை விளக்குகிறார்.

காட்டுமிராண்டி காலத்தில் ஆண்களும் பெண்களும் விலங்குகளைப் போல ஒழுகிய காலம்; பின்னர் ஆண்கள் ஒரு குழுவாகவும் இருந்து வாழ்ந்தகாலம்; பூனலூவா குடும்பமுறை, இணைக்குடும்ப முறை ஆகியவை படிப்படியாக உருவம் பெற்றன என எடுத்துரைக்கிறார். மற்றைய உயிர்களின் வளர்ப்புக்காலத்தைவிட மனிதக் குழந்தையின் வளர்ப்புக்காலம் கூடுதல் ஆகும். சில வாரங்களில் பறவைக் குஞ்சு பறக்கக் கற்றுவிடுகிறது. சில நாட்களில் மீன்குஞ்சு நீந்தக் கற்றுவிடுகிறது. ஆயின் மனிதக்குழந்தை ஓரளவு நினைவு தெரிய 48 மாதங்கள் அதாவது நான்கு ஆண்டுகள் ஆகின்றன. இக்கால இடைவெளியில், குழந்தை தாயைவிட்டுப் பிரிவது இல்லை. சுமப்பதிலோ, ஈன்றெடுப்பதிலோ, வளர்ப்பதிலோ அந்தக்காலத்தில் தந்தைக்குப் பங்கு இல்லை. எனவே, தாய்வழியாகவே மக்கள் அடையாளம் காட்டப் பெற்றனர் என்று தாயம்மாள் அறவாணன் கூறுகிறார். மனித வாழ்விற்கு ஒரு பிணைப்பினையும், சுவையினையும் தருகின்ற வற்றாத நதியாக என்றைக்கும் பெண்ணினம் உள்ளது.

மானிடத்தின் இயல்பான, பிறப்பு வளர்ப்பே பெண்ணுக்கு முதன்மையை இயற்கையே அளித்ததால், உலகின் பெரும் பகுதிகளில் தாய்த்தலைமை ஆதியானதாகக் கருதப்படுகிறது. தமிழகத்திலும் தாய்த்தலைமை இருந்தமையைக் கீழ்க்கண்ட கருத்துக்கள் மெய்ப்பிக்கின்றன. அவை வருமாறு :

1. தாய் எனப்பொருள்படும் அம்மன் கோவில்கள் மிகுதியாக இருத்தலும், மக்களால் மிகுதியாக வழிபடப் பெறுதலும்,

2. தமிழகத்தில் தாய்வழிப் பெண்ணுக்கே சொத்துரிமை இருந்ததைக் குமரிமாவட்டப் பழைய சேரநாடான கேரளம், தென்கருநாடகம் ஆகிய பகுதிகளிலிருந்த மருமக்கள் தாய்முறை நிலைநிறுத்தலும்,

3. மேற்கண்ட பகுதிகளில், குழந்தைகளுக்கு முன் எழுத்தாகத் தந்தைப்பெயர் அமைக்கப்பெறாமல் தாயின் பெயர் அமைக்கப்பட்டமையும்,

4. திருமணத்தின்போது மாப்பிள்ளையைப் பார்க்க முதலில் பெண் வீட்டார் செல்லாது, மாப்பிள்ளைவீட்டாரே பெண் வீட்டிற்கு வந்து பெண் கேட்கவேண்டும் என்ற மரபு போற்றப்படுதலும்,

5. திருமணத்திற்குப்பின் வளைகாப்பு, குழந்தைப்பேறு, தலைப்பொங்கல் எனத் தொடர்ந்து பெண்ணுக்கு அனுப்பப்பெறும் சீர்வரிசை ஆகியன, பெண்ணுக்குத் தாய் வீட்டில் இருக்கும் உரிமையைப் புலப்படுத்துவதும்,

6. தாய்க்கு முதன்மைதரும் இலக்கியக் குறிப்புகள், வழக்காறுகள் முதலியன, தமிழரைப் பொறுத்தவரை தாய் அல்லது பெண்ணே முதன்மை எய்தியிருந்தாள் என்பதை நிறுவுவனவாகும்.

**தாய்த்தலைமை சரிவு**

தமிழர் மரபும் மதமும் பெண்ணை – அம்மனைப் போற்றும் மதமாகும். ஆயின், தமிழகத்துக்குள் வந்தவர்கள் அனைவரும் ஆண்தலைமை மக்களாவர். தமிழரிடம் தொடக்கத்தில் அறிமுகமாகி ஆதிக்கம் பெற்ற மதம், ஆரியரின் வேதமாகும். ஆரியர், தந்தை வழி முறையினர்; ஆண்தெய்வ வழிபாட்டினர். அவரிடமிருந்து தமிழ்த் தொல்குடியினர் ஆண்தெய்வ வழிபாட்டையும் ஆண் தலைமையையும் ஏற்கவேண்டிய கட்டாயம் படிப்படியாக நேர்ந்தது. பெண்களைத் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள ஏற்ற சட்டதிட்டங்களையும் சாத்திரங்களையும், கற்பு என்பதையும் படைத்துக் காலமெல்லாம் கணவனின் அடிமையாக வாழ வகை செய்து கொண்டான்.

அயற்புலத்திலிருந்து வந்த ஆரியர், தங்களுடன் பெண்களை அழைத்து வரவில்லை என்பது கருதற்குரியது.

ஆரியர், தமிழருடன் பல்வேறு காலகட்டங்களில் மோதியபோது, சில நேரங்களில் தமிழர் தோற்றனர். ஆரியர் போர்ஒழுக்கப்படி தோற்ற மக்களை அடிமையாகக் கொண்டனர். தோற்றநாட்டுப் பெண்களைக் கவர்ந்து கொண்டனர். இதனால் ஆரியருக்கும் தமிழருக்கும் இடையில் இனக்கலப்பு நிகழ்ந்தது. அடிமைகொண்ட பெண்களை அடிமைகளாகவே குறித்தனர். எனவேதான் தாசர்களாகக் கருதப்பட்ட சூத்திரர்களுக்குச் சமமாகப் பெண்களை வைத்தனர். எனவே, தமிழகத்தில் பெண்ணுக்குரிய தலைமை பறி போவதற்கு ஆரியக்கலப்பு தலைமையே காரணமாக இருந்தது.

அடுத்து, வைதீக மதத்தை எதிர்த்து பிற்காலத்தில் செல்வாக்குப் பெற்ற சமணசமயமும், ஓர் ஆண்வழி சமுதாயமாக அமைந்ததோடு, போர்ச்சமுதாய அமைப்பு ஆணுக்கு முதன்மை கொடுத்தது. வடஇந்தியாவில் பிராமணப் புரோகிதத் தலைமையை எதிர்த்து சத்திரிய வம்சத்தவரான அரசகுலத்தார், சமண சமயத்தையும் புத்த சமயத்தையும் தோற்றுவித்தனர். இதனைச் சமண, புத்த சமய மூலவர்கள் அரசவம்சத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதே தெளிவுறுத்தும். எனவே சமண சமயத்தில் ஆண்தலைமை இயல்பாயிற்று. கி.மு. நூற்றாண்டுகளில் அச்சமயம் தமிழகத்தில் பரவியபோது, தொடக்கத்தில் அரசர்களையும், பின்னர் வணிகர்களையும் தம்வயம் ஈர்த்துக்கொண்டது.

ஆக, தமிழர் வரலாற்றில், இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்ட பெண்களின் நிலையை ஆரியரின் வரவு மேலும் பின்னுக்குத் தள்ளியது. சமண மரபு மேலும் பின்னுக்குத் தள்ளியதோடு "சொத்துரிமை ஆணின் கைக்கு மாற்றமுற்றபோதே பெண்ணின் அடிமை வாழ்வுக்கு அடிப்படை அமைந்துவிட்டது. பெண் பொருளாதாரச் சுதந்திரத்தைப் பறிகொடுத்தாள்; கணவனின் சொத்தாக அடிமையானாள் என்ற ஏங்கல்ஸின் கருத்து முழுமையும் உண்மையானதே. சமுதாயத்தின் இருகண்களில் ஒன்று ஆண்; மற்றொன்று பெண். இருகண்களும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவை. அவ்வாறிருக்க, நாகரிகத்தின் உச்சியில் இன்றும் நாங்கள்தான் என்று கூறிக்கொள்ளும் நாடுகளிலும்கூட பெண்கள் சமமாக மதிக்கப்படுவதில்லை. இன்றைக்குப் பெண்களைப் பொறுத்தவரை, சுதந்திர இந்தியாவில் அவர்களுக்கு முதலில் நலத்திட்டங்கள் *(Welfare Schemes)* வகுக்கப்பட்டன. அடுத்து, பெண்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் *(Planning for Women's*

*Development)* அமைந்தன. மூன்றாவதாகப் பெண்களின் இறையாண்மை *(Women Empowerment)* என்ற நிலைக்கு வந்தமையால், இன்று அரசியலிலும் அரசுப்பதவிகளிலும் இடஒதுக்கீடு பற்றி பேசப்படுகிறது. அனைத்துப் பகுதிகளிலும் வாழும் பெண்களுக்கு அறிவியல் ரீதியிலான கருத்துக்களை உருவாக்கி; தத்துவரீதியிலான அணுகுமுறைகளைப் படைப்பது கல்விநிறுவனங்களாலும் சமுதாயத் தொண்டு அமைப்புகளாலும் மட்டுமே சாத்தியமாகி அதன்மூலம் சட்ட அமைப்பின் வரையறுக்கப்பட்ட தீர்வு கிடைக்கும்.

## குலோத்துங்கன் படைப்பில் பெண்கள்

பெண்களைப் பாடாத கவிஞர்கள் மிகச்சிலர். அவர்களைப் பாடுவதில் கவிஞர்களுக்கு மகிழ்ச்சி. பெண்களைப் பாடவில்லையென்றால் கவிதை நிறைவுறாது என்ற எண்ணம் கொண்டவர்கள் பலர். பெண், ஆணுக்கு எதிர்பாலினமாக இருப்பதால் இவை இயல்பும்கூட. சமுதாயச் சிந்தனைகளை முன்வைத்துள்ள திருவள்ளுவர் கூடப் பெண்களைப் பற்றி கூறும்போது,

> *"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை*
> *மாதர்கொல் மாலும்என் நெஞ்சு"*

என்கிறார்.

இயற்கையாகவே தமக்குள்ள அமைதி குணத்தை வளரச்செய்வது சிறந்ததாகும். மனமும் சொல்லும் செயலும் அமைதியாக நடைபெறும்படி பழகுவதே இதன்வழியாகும். செல்வத்தைப் பெற்று ஆடை அணிகலன்களை அணிந்து வாழவேண்டும் என்பதையும், நுகரப்படுகின்ற பொருள்கள் மேலுள்ள அவாவைச் சுருக்குதலும் பெண்பாலார்க்குப் பெருஞ்சிறப்பாகும். பெரும்பாலும் பெண்மக்கள் நாம் தூய்க்கும் பொருள்களில் கிடைத்தமட்டில் மனஅமைதி பெறாமல் மேலும் அவற்றைப் பெறுதற்கும் நுகர்தற்கும் விருப்பம் உடையவர்களாய் இருத்தலும் நம்மொடு பிறந்தார்க்கும் தம்மைக் கொண்டார்க்கும் துன்பத்தையும் கவலையையும் வருவித்தலாலும் அவர்கள் அவ்விருப்பத்தைச் சுருக்கிக் கொள்ளுதல் வேண்டுமென்பதே ஔவை பிராட்டியார் கருத்தாகும் என்னும் மறைமலையடிகளின் கருத்து சிந்திக்க வேண்டியதாகும்.

சமுதாய வளர்ச்சிக்கும், தேசிய முன்னேற்றத்திற்கும் அன்பில், புரிதலுணர்வில், நம்பிக்கையில் வலிமைவாய்ந்த

குடும்ப அமைப்புத்தேவை. அக்குடும்ப அமைப்புகள் சரியாக இல்லாவிடில் தேசம் முன்னேற்றமடைவதில் தடைகள் ஏற்படும். இவ்வுலகம் பல ஏற்றத்தாழ்வுகளையும் வேறுபாடுகளையும், உயர்வு தாழ்வையும் வரலாற்றுக் காலந்தொட்டு கொண்டிருக்கிறது. இன்றும் நிலைத்துநின்று பலதுறைகளிலும் பரவி ஆட்சிசெய்கிறது. இவை நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் மாறுபடலாம். ஆனால் வேறுபாடுகளின்றி எங்கும் எல்லாச் சூழ்நிலைகளிலும் இரண்டாந்தர குடிமக்களாக ஏவல் செய்பவர்கள் பெண்ணினத்தார் மட்டுமே.

மனித இனம் மேற்கொண்ட இயற்கையை மீறிய செயல்முறைகள் மனித இனத்துக்குப் பெருமளவு ஆக்கத்தைக் கொடுத்தன. ஆனால் ஆண் பெண் பற்றிய நிலையில் ஒரே கருத்தானது பல ஆண்டுகளாக நிலைபெற்று விட்டது. இத்தகைய கருத்துக்கள் பெண்ணை அடிமைப்படுத்தும் நோக்கம் கொண்டன. பெண்கள் மனித சமுதாயத்தில் சம எண்ணிக்கை கொண்டவர்கள். இரண்டொரு உறுப்பில் மாற்றம் அல்லாமல் மற்றபடி "பெண்கள் மனித சமுதாயத்தில் ஆண்களுக்கு முழு ஒப்படைப்பும் உவமையும் கொண்டவர்கள் ஆவார்கள். பெண்ணினம் அடிமைத்தனத்திலிருந்து விடுபட வேண்டும். மனிதன் மிருகப் பிராயத்திலிருந்தபோது, காட்டுமிராண்டியாக இருந்த காலத்தில், மனிதன் தன் மூர்க்கத்தனத்தைக்காட்ட, பெண்ணை அடக்கியாள, பெண்ணைத் தனக்கு அடிமையாக்கிக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டதுதான் இந்தக் கலியாணம்" என்ற தந்தைப் பெரியாரின் கருத்து சிந்திக்கக்கூடிய ஒன்றாகும்.

வரலாற்றுக் காலத்தொடக்கம் முதல் சமூகத்தில் ஆணாதிக்கமே நிலவி வந்தது. குடும்பம், சொத்துரிமை, திருமணம், பெண்ணின் கற்பு, ஒழுக்கம், அரசியல் முதலிய எல்லாத்துறைகளிலும் ஆணாதிக்கம் நிலவியது. இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் பெண்கள் சுதந்திரம் பெற்றதாகக் கருதப்படும் பகுதிகளில் கூட, சமத்துவம் சுதந்திரம் என்ற பண்புகளின் ஆத்மாவை அறியாத, மேலெழுந்த வாரியான நிலையே காணப்படுகிறது.

தோற்றத்திலும், நடை உடைகளிலும் ஆண்களோடு போட்டியிடும் ஆசைநிலைதான் பெண்ணுரிமை என்ற பெயரில், மேலோங்கி நிற்கிறது. பெண்கள் தங்களுடைய தாழ்வு நீங்கவும், சமத்துவம் பெறவும், பூட்டப்பட்ட விலங்குகள் விலகவும், விடுதலை பெறவும், தங்களுடைய உரிமையை நிலைநாட்ட சோர்ந்துவிடவில்லை. ஆண் சமுதாயத்திடம் விடுதலை வேண்டுமென்று கேட்டவில்லை. ஏனெனில் விடுதலையும் சமத்துவமும் கேட்டுப்பெறுவன அல்ல. ஆண்கள் கொடுக்கப் பெண்கள் பெறுவதற்கு அதுவொன்றும் ஆணுலகின் உடைமையுமல்ல.

எனவே, பெண்கள் கிளர்ந்தெழுந்து சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றுக்குச் சமுதாயநீதி, பொருளாதாரவலிமை ஆகியவற்றைத் துணையாகக் கொள்ள வேண்டும். அதோடு இவைமட்டுமே சுதந்திரத்தையோ சமத்துவத்தையோ உருவாக்கிவிடுவதில்லை. உலகின் முதல் பிரபுத்துவச் சுரண்டல் என்பது பெண்ணினத்தின் மீது ஆணினம் நடத்தத் தொடங்கியதுதான் என்பது பிரெடரிக் ஏங்கல்ஸின் கருத்து. தந்தை வழிச் சமூகம் தலையெடுக்கத் தொடங்கிய நாள் முதலே, பெண்ணின் மனவலிமையைத் துடைத்தெறிந்து, அவளைப் பாலியல் பிண்டமாக்கி சாஸ்திரம், புராணம், இதிகாசம், ஸ்மிருதிகள், பழமொழிகள், இலக்கணங்கள் என அனைத்து வழிகளிலும் அதன் செயல்களை இன்றுவரை சுவைத்துத் துய்த்து வருவது. ஆணினம் என்ற உண்மையை மாற்றினால்தான் சுதந்திரம் கிடைக்கும். சுதந்திரம் சமத்துவம் என்பன ஒரு மனநிலை; அறிவுநிலை; அவை உள்ளத்தில் வளர்ந்து உயர்ந்து நிற்றல் வேண்டுமென்பதை எந்நிலையிலும் மறந்துவிடக்கூடாது. சென்ற நூற்றாண்டில், உலகமுழுவதும் பெண்களின் நிலைபற்றிய ஆய்வுகளும் விவாதங்களும் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தன. இனம், மொழி, சாதி அனைத்தையும் கடந்து, நலிந்த இனமாகப் பெண்கள் இருந்தார்கள். முன்னேறிய நாடுகளுக்கும்கூட இது பொருந்தும்.

*****

# நத்தம் போல்

திருவறக் கவிஞர் புலவர் தோ. ஜம்புகுமாரன்

ஒரு குறள் படும் பாடு என்னும் தலைப்பில் பிப்ரவரி திங்கள் இதழில் வெளியிடப்பெற்ற ஆய்வுக் கட்டுரையைப் படித்தேன். பெரும்புலவர் திரு. ப. அரங்கசாமி அவர்கள் அரிதின் முயன்று,

*"நத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடும்*
*வித்தகற்க் கல்லா லரிது"*

என்னும் குறட்பாவில் பொதிந்துள்ள மையக்கருத்தை அறிஞர் பலர் வரைந்துள்ள உரைகளை எடுத்துக்காட்டித் தம் கருத்தை நிறுவியுள்ளமை பாராட்டிற்குரியது.

பிறர் உரைகளாக அவர் காட்டியவற்றுள் அறிந்து கொள்ள வேண்டிய ஒருவரின் உரை விடப்பட்டுள்ளது. அதைக் கூறப்போந்ததே இக்கட்டுரையாளர் நோக்கம். மற்றும் அவ்வுரையில் 'நத்தம்' என்பதற்குக் கொள்ளப்பட்ட பொருளும் பற்றி அறியவேண்டுவது இன்றியமையாததே.

தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்தின் வெளியீடாக 1991ஆம் ஆண்டு திருக்குறள் ஜைனர் உரை என்னும் நூல் ஒன்று வெளியிடப்பெற்றுள்ளது. தஞ்சைப் பல்கலைக்கழகச் சுவடித்துறை, சிறப்பு கேண்மை பேராறிஞரியம் கே.எம். வேங்கடராமையா அவர்கள் அதைப் பதிப்பித்துள்ளார்.

இதற்கு முன்னதாகவும் 1949இல் கவிராஜ பண்டிதர் என்பவரால் எழுதப்பட்ட திருக்குறள் உரைநூல் வெளி வந்துள்ளது. இவ்வுரை நூலைப் பேராசிரியர் அ. சக்கரவர்த்தி நயினார், அவர்கள் பதிப்பித்துள்ளார்கள்.

தருமபுர ஆதீனத்தில் வெளியிடப்பெற்ற திருக்குறள் உரைவளத்தில் இச்செய்தி கண்டுகொள்ளப்படாமல் விடப்பட்டுள்ளது. ஆயின் திருக்குறள் உரைவளம் தயாரித்த மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வெளியிடப்பட்ட திருக்குறள் உரை களஞ்சியத்தில் இவ்வுரை (கவிராஜபண்டிதர் உரை) இடம் பெற்றுள்ளது.

முன்னர் குறிப்பிடப்பெற்ற இரண்டு உரைகளிலும், நத்தம் என்னும் சொல்லிற்கு இரவுப்பொழுது எனப் பொருள் சுட்டப்பட்டுள்ளது. நத்தம் போல் – இரவுப் பொழுதைப் போல் –

அதாவது "புகழுடையவர்களுக்கு அரிதாகிய கேடும், சாக்காடும் உண்டானாலும் அறிவுடையவர்கள் இராத்திரிப் பொழுது போலே (அவை) நிலையல்ல வென்றெண்ணுவார்களென்றவாறு" அதோடு "அறிவுடையவர்கள் செல்வத்தையும் தரித்திரத்தையும் நிச்சயமென்று நினையார்க ளென்றவாறு" என்னும் சிறு விளக்கமும் தரப்பட்டுள்ளது.

கவிராஜ பண்டிதர் உரையில் இக்கருத்து வேறான தொடர் அமைப்பில் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது.

"அரிய கேடும் சாக்காடும் வந்தாலும் இராத்திரிபோலச் சரீரமும் செல்வம் முதலியவும் நிலையில்லை என்று சந்தோஷமாக நினைத்துப் போகிறது பெரியோர்க்கு ஆகும்; ஜீவ ஸ்வரூபம் தவிர மற்றவைகளை நிச்சயமாக நினையார்கள் என்றவாறு."

இவ்விரு உரைகளுமே 'நத்தம்' என்னும் சொல்லிற்கு இரவுப்பொழுது என்னும் பொருளைத் தழுவியே எழுதப்பட்டுள்ளன.

நிலையாமைக்கு ஜைன இலக்கியங்களில் பல இயற்கை நிகழ்வுகளை உதாரணமாகக் காட்டுவர். 'கூற்றுவன், சூரியனை நாழி என்னும் அளவு கருவியாகக்கொண்டு உமது வாழ்நாளை நாள்தோறும் அளந்து ஆயுள் இறுதியில் உயிரை உண்ணுவான்.' என நாலடியார் காட்டும் உவமை நோக்கத்தக்கது.

> *"தோற்றம் சால் ஞாயிறு நாழியா வைகலும்*
> *கூற்றம் அளந்து நும் நாளுண்ணும்"* (நாலடி-7)

என்பது அது.

'நாளென ஒன்றுபோல் காட்டி' என்கிறார் தேவர் பெருமானும்

மதுரைத் தமிழ்ச்சங்க நிறுவனர் வள்ளல் பொ. பாண்டித்துரைதேவர் அவர்களியற்றிய சிறப்புப் பாயிரத்தை மகுடமாகத்தாங்கி நா. கதிரைவேற்பிள்ளை அவர்களாலும் மற்றும் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் காஞ்சிநாத லிங்கமுதலியார் அவர்களாலும் தொகுக்கப்பெற்று 1911ஆம் ஆண்டில் வெளிவந்த தமிழ்மொழி அகராதியில் நத்தம் என்னும் சொல்லிற்கு, சங்கு, நத்தை என்பனவற்றோடு, இராத்திரி, நடு, புன்கமரம், மூக்கு, வாழை எனப்பல பொருள்களும் காணப்படுகின்றன.

பெரும்புலவர் அவர்கள் மேற்படி குறட்பாவிற்கு "சங்குப்பூச்சியாகிய நத்தை, சங்கை உருவாக்குங்கால் தனக்குண்டாகும் கேட்டினைப் பொறுத்துக்கொள்ளுதலும் நிலைத்த பொருளாகிய சங்கை முழுமையாக உருவாக்க உயிர்விடுவதையும் போல" என மொழிகின்ற உவமை விளக்கத்தையும் கூட முற்றிலும் முடிந்த முடிபாகக் கொள்ளுவதற்கு ஒல்லுமோ? என்பது ஆய்வுக்குரியதே.

—*—*—*—*—

# மதுரை - கூடல் - சொல்லாய்வு

முனைவர் சு. காளிமுத்து

மதுரை மாநகரம் வரலாற்றுத் தடங்கள் நிறைந்த தொன்மையான நகரமாகும். இது பாண்டியர்களின் ஒரே தலைநகரமாக ஆதிமுதல் பாண்டியன் நெடுஞ்செழியன் காலம் வரை நிலைத்திருந்திருக்கிறது. மதுரை என்றதும் உடன் பாண்டியர்களும், மீனாட்சி அம்மன் ஆலயமும் நீங்கா இடம் பிடிக்கின்றன. மதுரையைச் சங்க இலக்கியங்களும், சிலப்பதிகாரமும், பின்னால் எழுந்த இலக்கியங்களும் பல்வேறு பெயரிட்டு பலவாறு புகழ்ந்து பாடியுள்ளன. பல்வேறு பெயர்களில் வழங்கப்பட்டாலும் அவையனைத்தும் காரணப்பெயர்களாகவே காணப்படுகின்றன. எதுவும் இடுகுறிப்பெயரில்லை.

சிலப்பதிகார மதுரைக்கு கூடல், ஆலவாய், ஜீவன் முத்திபுரம், கன்னிபுரம், சமட்டிவிச்சாபுரம், பூலோக சிவலோகம், சிவநகரம், கடம்பவன சேத்திரம், துவாத சாந்த ஸ்தலம், முடித்தலை கொண்ட சோழபுரம் முதலிய மாற்றுப் பெயர்கள் காலம்தோறும் வழங்கப்பட்டுள்ளன (கண்மணி 95) என்ற கருத்தினடிப்படையில் மதுரைக்குப் பல பெயர்கள் இலக்கியங்களில் வழங்கப்பட்டன என்பதை உணரமுடிகின்றது.

கூடல் என்ற பெயர் இன்றும் வழக்கிலுள்ளது. இன்றைய மதுரை கடைவீதியில் கூடல்மாநகர் என்ற பெயர்ப்பலகை தூய தமிழில் இருப்பதனை அறிய முடிகின்றது. அப்பர்,

*"தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே*
*சிந்திக்கப் பெற்றேன் நானே" 6 : 378 : வா : 1 என்றார்.*

இதில் கூடல் என்பதுடன் தென் என்ற திசையடையும் இணைந்து மதுரையைக் குறித்து நிற்கின்றன.

கல்லாடம் கற்றவரிடம் சொல்லாடல் முடியாது என்பர். அத்தகைய சொற்சிலம்பம் நிறைந்த கல்லாடத்தில் கூடல் ஆலவாயினுள் அருளுடன் நிறைந்த பவளச் சடையோன்– என்ற அடியில் (கல்–அடி 19–21) கூடல் என்ற பெயரால் மதுரை அழைக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகம் (1982) பேரகராதி கூடல் என்ற சொல்லுக்கு எட்டுவிதமான பொருள்களை மேற்கோள் (ப–1068) காட்டியுள்ளது, அவையாவன

1. பெருந்துகை (உரி, நிகண்டு)
2. புணர்ச்சி கூடற்கட் சென்ற தென்னெஞ்சு – குறள் 1284

3. நதியின் சங்கமுகம் மலியோதத் தொலிகூடல் (பட்டின. 98)
4. நதிகள் ஒன்றுடன் ஒன்று கூடுமிடம்.
5. தேடுகை (பிங்கலம்)
6. தலைவனைப் பிரிந்த மகளிர் அவன் வரும் நிமித்தம் அறிய தரையில் சுழிக்கும் சுழிக்குறி – வசுதேவர் தங் கோமகன் வரிற்கூடிடு கூடலே (திங். நாய்ச். 3)
7. மதுரை கூடனெடுங் காடி யெழவே (கலி. 31)
8. அடர்த்தியான தோப்பு–செயலைக் கூடலே (இரகு தேனுவிற் 70)

என்பனவாகும். இவற்றுள் கலித்தொகையில் 31வது பாடலை ஆதாரமாகக் காட்டி கூடல் என்பது மதுரையையும் குறிக்கும் என்றனர். இந்த அடிப்படையில் கூடுமிடம் கூடல் என்ற காரணத்தினடிப்படையில் இச்சொல் அமைந்திருப்பதனை அறியமுடிகின்றது.

கூடல் என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததுதான் முக்கூடற்பள்ளு. இந்த இலக்கியமும் பொருநை, தாமிரபரணி, சின்னாறு என்ற மூன்று ஆறுகளும் சங்கமிக்கும் திருநெல்வேலி படித்துறையில் உள்ள இறைவனை வாழ்த்தியும், உழவு வேளாண்மையில் வயப்பட்ட பள்ளன், பள்ளி வாழ்க்கை முறையையும் கூறுவதனால் ஒருங்கு சேர முக்கூடற்பள்ளு எனப்பட்டது.

மாறவர்மன் முதலாம் இராசசிம்மன் கி.பி. 748 – 765 வரை 25 ஆண்டுகள் பாண்டிய நாட்டை ஆண்டான். பல போர்களைச் செய்து வெற்றி பெற்று, பாண்டிய நாட்டின் எல்லையை விரிவுபடுத்தினான். அவனுக்கு இறையெண்ணமும், ஆலய நிர்மாணமும் செய்வதில் அதிக ஈடுபாடிருந்தது. அதனால் "கூடல், வஞ்சி, உறையூர் கோயில்களை அவன் பெரிதாக்கிச் செப்பம் செய்தான்." (கா. அப்பாதுரையார் – தென்னாடு – 82 – கழகம்) என்று கூறுவதில் கூடல் என்பது மதுரையைக் குறிக்கும் சொல்லாக அமைந்துள்ளது.

கூடல் என்ற சொல் மதுரையைக் குறித்த காரணப்பெயர் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. எனினும் இதன் அடிப்படை இரண்டு முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியதாகவுள்ளது. அவை கூடல் என்பது கடல்கோள்களுக்குப்பின் புலவர்கள் கூடுமிடம் என்ற பொருளிலும் இதே அடிப்படையில் மதுரை நகரக்கோட்டைக் கொத்தளங்களின் மேல் கோபுரங்கள் இருந்ததால் மாடக்கூடல், பன்மாடக்கூடல் என்பன போன்ற வழக்குகள் நடைமுறைக்கு வந்துள்ளன.

புறநானூற்றில் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்ற புகார் நகரத்துப் புலவர் பாடிய (58) பாடலில்,

"தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே" என [புறம் (58)] பாண்டிய மன்னன் தமிழ் மணம் வீசும் கூடல் என்ற மதுரையிலே ஆட்சி நடத்தினான் எனப் புகழ்ந்துள்ளார்.

கூடல் என்பதற்கு ஆறுகள் சங்கமிக்குமிடம் என்பதற்கு ஆதாரமில்லை. இதனை, மதுரை அருகே வைகையாற்றில் இருந்து கிருதமால் என்ற ஒரு நதிக் கிளைப் பிரிந்து செல்கிறதே அன்றி வேறெந்த கிளை நதியும் வந்து கூடியமைக்கு ஆதாரமில்லை (ந. கண்மணி ப.100) என்று கூறியுள்ளார். இதனால் கூடல் என்ற சொல் ஆற்றுச் சங்கமம் தொடர்பானதல்ல என்பது மிகத் தெளிவானதாகவுள்ளது.

கடல்கோள்களுக்குப் பிறகுப் புலவர் கூடும் இடம் என்பது சரியான பொருள் தரக்கூடியதாக உள்ளது. மதுரைக் கோயிலின் சுற்றுப் பிரகாரத்தில் தமிழாய்ந்த சங்க மண்டபமும், 49 புலவர்களின் சிலைகளும் இன்றும் உள்ளன. மதுரையில் புலவர் கூடும் சங்கமிருந்ததை அப்பரடிகள்,

*"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி*
*நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்*

என்றார். இதே போல் திருக்கோவையார்,

*உறைவான் உயர்மதிற்கூடலில் ஆய்ந்த வொண் தீந்தமிழின்*
*துறைவாய் நுழைந்தனையோ"*

என்று சுட்டுகின்றது. கடல்கோள்களினால் தென்மதுரையிலிருந்த சங்கம், கபாடபுரம் வந்து, கபாடபுரம் மூழ்கியதால் அங்கிருந்து மதுரை வந்து மூன்றாம் சங்கமாக நிலைத்திருந்து தமிழாய்ப்பட்டதினால் புலவர் குழு கூடுமிடமே கூடல் என்ற சொல் உண்டாகக் காரணமாகும் என்பதுண்மை. இந்த அடிப்படையிலேயே கூடல் என்ற சொல் மதுரையைக் குறிக்கப் பயன்பட்டது.

**கருவி நூல்கள்**


1. S. கண்மணி – சிலப்பதிகாரம் காட்டும் நாடும் நகரமும் – முனைவர் பட்ட ஆய்வு ஜி பதிப்பகம், மதுரை–9.
2. கா. அப்பாத்துரையார், தென்னாடு, கழகம் வெளியீடு.

# புறநானூறும் - சிலப்பதிகாரமும்

பி. தளம்

**முன்னுரை :**

சங்க இலக்கியம் காலத்தால் முற்பட்டது. இவ்விலக்கியங்களில் செய்யுள் வரிகள் சிலவற்றில் குறைந்தும், சிலவற்றில் மிகுந்தும் காணப்படுகின்றன. காலத்தால் பிற்பட்டதும், செய்யுள் வரிகள் மிகுந்தும் காப்பியச் சுவையுடன் விளங்குவது சிலப்பதிகாரமாகும். சங்க இலக்கியமாம் புறநானூற்றில் காணப்படும் இரண்டு செய்திகள் சிலப்பதிகாரத்திலும் காணப்படுகின்றன. அவற்றை ஒப்பிட்டுக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

I. **இருவகைக் கூத்து :**

புறநானூறு பாடிய புலவர்களுள் ஒருவர் மதுரைத் தமிழ்க் கூத்தனார் (பா.எண்.334) என்று காணப்படுகிறது. இவர் பாடிய பாடல் சிதைவுற்றிருந்தாலும் பெயர் தமிழ்க்கூத்தனார் என்று காணப்படுகிறது, சிலப்பதிகாரம் கூறும்,

*"இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து"*

என்ற பாடல் வரிகளுக்கு, இருவகைக் கூத்தாக அகக்கூத்து, புறக்கூத்து எனவும், ஆரியக்கூத்து, தமிழ்க்கூத்து எனவும் பொருள் கூறுவர்.

புறநானூற்றில் காணப்படும் தமிழ்க்கூத்தனாருக்குத் தமிழ்க்கூத்தின் இலக்கணம் தெரிந்திருக்கலாம். இதனாலேயே, இவருக்கு இப்பெயர் வழங்கப்பட்டிருக்கலாம். மேலும், கும்பகோணத்திலுள்ள நாகநாதசாமி கல்வெட்டொன்று விருதராச பயங்கர ஆசாரியன் என்றொரு கூத்தன் வீரநாராயணபுரத்துக் கயிலாமுடைய மகாதேவர்க்குரிய சித்திரை விழாவில் ஐந்துமுறை தமிழ்க்கூத்தாட வேண்டும் எனவும் அவனுக்கு இறையிலியாக நாகன்பாடி என்ற ஊரில் நிலங்கள் வழங்கப்பட்டமையையும் குறித்துள்ளது. இதிலிருந்து தமிழ்க்கூத்து தமிழ்நாட்டில் வழக்கத்தில் இருந்துள்ளமை தெரியவருகிறது எனலாம்.

புறநானூறில் - (கூத்து) அல்லியப்பாவை

கோவூர்க்கிழார் என்ற புலவர் சோழன் நலங்கிள்ளியின் பெருமைகளைப் பற்றி புகழ்ந்துள்ள பாடலில்,

*"வல்லோன் தைஇய வரிவனப்பற்ற*
*அல்லிப்பாவை யாடு வனப்பு ஏய்ப்ப" (பா.எண். 33).*

என்ற வரிகள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் கூறப்பட்டுள்ள அல்லிப்பாவை, 'அல்லியனென்னும் கூத்தையாடும் அழகு' என்று உரை கூறப்பட்டுள்ளது.

**சிலப்பதிகாரத்தில்**

இளங்கோவடிகள் மாதவியை அறிமுகப்படுத்தும் காதை அரங்கேற்றுக் காதையாகும். இதில், நாட்டிய நங்கை ஆடும் ஆடல்வகையில்,

*"பதினோர் ஆடலும், பாட்டும் கொட்டும்" (சி.அகா. 14).*

என்ற வரி இடம் பெற்றுள்ளது. இதற்கு ஆடல்வகை பதினொன்றில், மாயவன் ஆடும் அல்லி என்பதொன்று என உரை எழுதப்பட்டுள்ளது. 'அல்லிப்பாவை' என்பது, ஆணும் பெண்ணு மாய கோலமுடைய ஆடும் பாவை ஆடலாகும்.

புறநானூற்றில் காணும் அல்லிப்பாவை சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள ஆடல் வகையில் ஒன்றே எனத் தெளிவாகிறது.

**II. புன்னுறுபுன்கண்தீர்த்தோன்**

சோழ வளநாட்டை ஆண்ட மன்னர்களில், மனுநீதிச் சோழனும் சிபிச் சக்கரவர்த்தியும் மிக சிறப்புப் பெற்றவர்கள். இதில், சிபி சக்கரவர்த்தியைப் பற்றி புறநானூற்றில் மூன்று பாடல்கள் இடம் பெற்றுள்ளன. மாறோக்கத்து நப்பசலையார் என்ற பெண்பாற்புலவர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் புகழ்ந்து,

*"புள்ளுறு புன்கண் தீர்த்த வெள்வேற்*

*சினங்கெழு தானைச் செம்பியன் மருக"* (பா.எண். 37).

என்றும்,

*"புறவினல்லல் சொல்லியகறையடி"* (பா.எண். 39).

என்றும் பாடியுள்ளார்.

மேலும், இக்கிள்ளிவளவன் மலையமான் மன்னனின் மக்களைக் கைதுசெய்து கொணர்ந்து யானைக்காற்கீழிட்டுக் கொல்ல முற்பட்ட போது கோவூர்க்கிழார்,

*"நீயோ புறவினல்லன்றியும், பிறவும்*

*இடுக்கண் பலவும் விடுத்தோன்"* (பா.எண். 46)

என்றும் பாடியுள்ளார். இப்பாடல்கள் வழி, புறாவின் துன்பத்தைத் தீர்த்த சிபிச் சக்கரவர்த்தியின் மரபில் தோன்றிய சோழ மன்னன் நீ, மற்றவருக்குத் தீங்கு நினையாதே என அறிவுறுத்தியுள்ளார்.

**சிலம்பில் சிபிச் சக்கரவர்த்தி**

முப்பது காதைகளைக் கொண்ட சிலப்பதிகாரத்தில் திருப்புமுனையாக அமையும் காதை வழக்குரைக் காதையாகும். புகார்க் காண்டத்தில் பொறுமையின் சிகரமாகத் திகழ்ந்தவள் கண்ணகி. ஆனால், கணவன் கள்வன் எனக் குற்றம் சாட்டப்பட்டு கொலைக்களக் காதையில் இறந்துபடுகிறான். அடுத்துவரும் வழக்குரைக் காதையில், கண்ணகி கணவன் கள்வன் அல்ல என நிரூபிக்க ஒற்றைச் சிலம்பைக் கையில் ஏந்தி கண்ணீருடன் அரண்மனைக்குச் செல்கிறாள். அவளைக் கண்ட மன்னன்,

*"நீர்வார் கண்ணை எம்முன்வந்தோய்*

*யாரையோ நீ மடக்கொடியோய் என"*

(சி.வ.காதை 48, 49)

வினவ, கோவலன் மனைவி நான் எனப் பதில் கூறாமல்,

சோழநாட்டின் பெருமையையும், செங்கோல் ஆட்சியையும், மன்னர்களின் அறப்பண்பையும் கண்ணகி வழியாகக் கூறியுள்ளார் இளங்கோவடிகள்.

> *"தேரா மன்னா செப்புவது உடையேன்*
> *எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்*
> *புள்ளுறு புன்கண் தீர்த்தோன்"* (வ.காதை 50 - 52).

என்கிறார். இதன் பொருள், தேவர்களும் வியப்படையுமாறு புறாவின் துயரினைத் தீர்த்தவன் தோன்றிய புகார் நகரமே எனது ஊர் என்பதாகும். பாடல் வரிகளில்,

புள்ளுறு புன்கண் தீர்த்தோன் – என்ற புறநானூற்றின் வரியையே, இளங்கோவடிகள் எடுத்தாண்டுள்ளார் என்பதும், சோழ மன்னன் சிபிச் சக்கரவர்த்தி புறாவிற்காகத் தன் தசையைத் தந்து துயர் தீர்த்தவன் என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

**முடிவுரை : சிலப்பதிகாரம்,**

1. ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்.
2. அரசியல் பிழைத்தோர்க்குஅறம் கூற்றாக அமையும்.
3. உரைசல் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்.

என்ற முப்பெரும் உண்மைகளை வலியுறுத்தும் நூலாகும். இதில், அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாக அமையும் என்ற உண்மையைக் கூறும் இடம் வழக்குரைக் காதையாகும். புறநானூற்றில் இடம் பெற்ற பாடற் வரிகளே, சிலம்பிலும் இடம் பெற்றிருப்பது அந்நூலின் சிறப்பினை எடுத்துக் காட்டுகிறது எனக் கூறினால் அது மிகையன்று.

# அப்பொடு கலந்த உப்பு

ஆறுவிரல் ஐம்பொறி

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே, இவ்வுப்பு கடற்கரையில் உள்ள உப்பளத்தில் விளைவிக்கப்படுகிறது. விதை போட்டு உப்பை விளைவிக்கிறார்களா? இல்லை. பாத்தி கட்டுகிறார்கள். அப்பாத்தியில் கடல்நீரைத் தேக்கி வைக்கிறார்கள். சூரிய வெம்மையால் பாத்தியில் உள்ள நீர் மட்டும் மெல்ல மெல்ல ஆவியாகிறது. பாத்தியில் உப்பு மட்டும் கீழே படிந்து நிற்கிறது. இஃது ஓர் அறிவியல் உண்மை.

ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் கோலிகுண்டுகளை நிரப்புங்கள். குண்டுகளுக்கு இடையே உள்ள இடைவெளிகள் பெரிதாகத் தெரிகின்றன. அப்பாத்திரத்தில் துவரம்பருப்பைச் சேர்ப்பதால் குண்டுகளின் மட்டம் உயர்வதில்லை. குண்டுகளின் இடைவெளியில் பருப்பு புகுந்துகொள்கிறது. மற்றொரு கண்ணாடிப்பாத்திரத்தில் கடுகை நிரப்புங்கள் கடுகுகளுக்கு இடையேயுள்ள இடைவெளிகள் சிறிதாகத் தெரிகின்றன. இப்பாத்திரத்தில் சர்க்கரையைச் சேர்ப்பதால் கடுகின் மட்டம் உயர்வதில்லை. கடுகுகளின் இடைவெளியில் சர்க்கரை புகுந்து கொள்கிறது. மூன்றாவது கண்ணாடிப் பாத்திரத்தில் தண்ணீரை நிரப்புங்கள். தண்ணீருக்கு இடையேயுள்ள இடைவெளிகள் கண்ணுக்குத் தெரிவதில்லை. இப்பாத்திரத்தில் உப்பைச் சேர்த்தால் நீர் மட்டம் உயர்வதில்லை. உப்பு சிறு சிறு நுண்ணிய துணுக்குகளாகி நீரின் இடைவெளியில் புகுந்துகொள்கிறது. இஃது ஓர் அறிவியல் உண்மை.

இவ்விரு அறிவியல் உண்மைகளையும் ஒரே பாடலில் திருமூலர் எடுத்தோதுகின்றார். திருமந்திரத்தில் முதல் தந்திரத்தில் உபதேசம் என்னும் பகுதியில் இப்பாடல் இருபத்தி நான்காம் இடத்தில் உள்ளது. பாடல் இதோ :

*“அப்பினிற் கூர்மை ஆதித்தன் வெம்மையால்*
*உப்பெனப் பேர்பெற்று உருச்செய்தது அவ்வுரு*

அப்பினிற் கூடிஅது ஒன்றாகும் ஆறு போல
செப்பில் இச் சீவன் சிவத்துள் அடங்குமே"

இப்பாடலில் ஆதித்தன் வெம்மையால் உப்பெனப் பேர் பெற்று என்ற சீர்களின் மூலம் உப்பு விளைவிக்கும் முறைமையைத் திருமூலர் விளம்புகின்றார். இப்பாடலில் இறுதி இரண்டு அடிகளின் மூலம் தண்ணீரின் இடைவெளியில் உப்பு அடங்குவது போல சீவன் சிவத்துள் அடங்கும் என்றும் உணர்த்துகின்றார்.

உயிரெழுத்தும், மெய்யெழுத்தும் புணர்ந்து உயிர்மெய் எழுத்து பிறக்கிறது என்பதை நாம் அறிவோம். ஒரு மாத்திரை அளவு ஒலிக்கும் உயிர்க்குறிலும் அரை மாத்திரை அளவு ஒலிக்கும் மெய் எழுத்தும் புணர்ந்து உயிர்மெய்க்குறில் ஆகும்போது அவ்வுயிர்மெய்க்குறில் 1 1/2 (1+1/2 = 1 1/2) மாத்திரை அளவே ஒலிக்க வேண்டும். ஆனால் உயிர்மெய்க்குறில் ஒரு மாத்திரை அளவே ஒலிக்கிறது. ஏன் இந்தக் குறைபாடு? அரை மாத்திரை எங்கே?

இந்த அரை மாத்திரை தண்ணீரின் இடைவெளியில் புகுந்த உப்பு போல அடங்கி விடுகிறது என்ற இலக்கணக் கூற்று மனங்கொளத் தக்கது. அப்பொடு கலந்த உப்பே போல என்ற உவமையின் மூலம் இக்கருத்து இலக்கணத்தில் நிறுவப்படுகிறது. நீரில் உப்பைச் சேர்த்தால் நீர்மட்டம் உயர்வதில்லை. அதுபோல மெய்யோடு சேர்ந்த உயிர் தன் அளவில் மாறா இக்கருத்தைத் தொல்காப்பியர்,

"மெய்யோ டியையினும் உயிரியல் திரியா"-

(தொல் - எழுத்து - 10

என்ற நூற்பாவின் மூலம் புலப்படுத்துகின்றார்.

அக்காலத்தில் தமிழ்க்கவிஞர்கள் அறிவியல் நுட்பத்திலும் சிறந்து விளங்கினர் என்றால் அது மிகையாகாது.

# தொல்காப்பியரின் நோக்கியல் திறனாய்வுக் கொள்கை

உ. சண்முகநாதன்

## முன்னுரை

உயர்தனிச் செம்மொழியான தமிழ்மொழியின் முதனூலாகத் தொல்காப்பியம் விளங்குகிறது. தொல்காப்பியம் எனும் பேரிலக்கண இலக்கிய நூல் பாவியல் கொள்கைகளைப் பேசுகின்ற நூலாகவும், செவ்வியல் தன்மை கொண்ட இலக்கண நூலாகவும் மிளிர்கின்றது. பல்வேறு வகையான இலக்கண, இலக்கியக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், வகைமைகளையும், படைப்பாக்க நெறிகளையும், தன்னகத்தே கொண்ட நூலாகக் காட்சி தருகின்றது. வடிவம், பொருள், உள்ளடக்கம், உத்தி (அ) திறன் போன்றவற்றை விளக்கும் 'நோக்கு' என்னும் தொல்காப்பியரின் நோக்கியல் திறனாய்வுக் கொள்கையை விளக்குவதே இக்கட்டுரை.

## தொல்காப்பியரும் - தொல்காப்பியமும்

தமிழ் இலக்கிய வரலாற்றில் தொல்காப்பியனாருக்குத் தனி இடம் உண்டு. தொல்காப்பியர் இலக்கிய, இலக்கண கருத்தாவாகக் காட்சி அளிப்பது தமிழர்களுக்குப் பெரும் மதிப்பு நிலையை மாற்றுமொழி அறிஞர்களிடமிருந்து தந்துள்ளமை மறக்க இயலாது. "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியனார்" என்று பனம்பாரனன் கூறுவதால் இவரது காலத்தை ஆய்வாளர்கள் கி.மு. 8-ம் நூற்றாண்டுக்குக் கொண்டு செல்கின்றனர். ஏனெனில் பாணினி முனிவருக்கு முற்பட்டவர் தொல்காப்பியனார். அஃது எவ்வாறு ஆயினும் தொல்காப்பியனாரின் காலம் 2400 ஆண்டுகளுக்குப் பிற்பட்டதன்று என்பர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார். மேலும் தொல்காப்பியர் கவிஞர்களை ஆராயும் கவிதையியலாளன்; பேரிலக்கணப் பேரறிஞன்; பெரும் பாவியல் பேராசான் என்று வியந்து போற்றிப்புகழ்வார் அகத்தியலிங்கனார். தமிழ் இலக்கணக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் படைத்து அவற்றிற்கு உருவும், உயிரும் கொடுத்து உலக இலக்கியக் கொள்கைகளுடன் உலவ விட்டவர் தொல்காப்பியர் என்றால் மிகையாகாது. எனவே தான் தொல்காப்பியனாரை

"உலகப்பேராசான்" என்று ச.அகத்தியலிங்கனாரும், தமிழ் இலக்கியக் கோட்பாட்டுத்தந்தை என்று தமிழண்ணல் அவர்களும் சிறப்புச் செய்வர். உலக இலக்கிய இலக்கணச் சிந்தனைகளோடு ஒப்பிட்டுப் பேசும்படியான தொல்காப்பியம் செவ்வியல் தன்மையைத் தன்னகத்தே பெற்றுள்ளது எனலாம். தொல்காப்பியம் தமிழுக்குக் கிடைத்திட்ட அரிய நூல். ஆனால் மொழிநடையிலும், சொல்முறையிலும் எளிய நூல்; இந்நூல் தோன்றி 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்டாலும் இன்னும் இது புதுமைமிக்கதாய்த் தோன்றுகிறது என்று கூறுவர். தொல்காப்பியம் 1610 நூற்பாக்களுடன் 3684 வரிகள் அடங்கியதாகும். பண்டைத்தமிழர்களின் இலக்கிய இலக்கண ஆளுமையின் அடையாளமாகத் தொல்காப்பியம் விளங்குகிறது. "பொருளதிகாரம் என ஒன்றை வகுத்துத் தந்ததன் மூலம் தமிழர் நாகரிகம், பண்பாடு, இலக்கியத்திறன் ஆகியவற்றை நிலைபெறச் செய்த பெருமைக்குரியது இது" எனத் தொல்காப்பியத்தின் பெருமையினை உரைப்பார் தமிழண்ணல்.

> *"கனியில் மூன்று தமிழில் மூன்று*
> *கண்டதாரடா - தொல்*
> *காப்பியத்தின் பெருமை வேறு*
> *மொழியில் ஏதடா"*

என்னும் பாடல் வரியின் மூலம் கவியரசர் கண்ணதாசனார் தொல்காப்பியத்தின் சிறப்பினை உள்ளவாறு உணர்ந்து உரைக்கின்றார். தொல்காப்பியம் முந்து நூல் கண்டு முறைப்படி செய்திட்ட இலக்கிய இலக்கணக் களஞ்சியம் ஆகும். இவற்றுள் தமிழ் இலக்கிய மொழி வரலாறு, தமிழினத்தின் வாழ்வியல் விழுமியங்கள், இலக்கியப் படைப்பாக்க நெறிகள், உத்திமுறைகள், போன்றவற்றைக் காணலாம். மேலும் பழமைக்கும் பழமையாய். புதுமைக்கும் புதுமையாய் உலக இலக்கிய வரலாற்றில் உன்னதமான, முதன்மையான இடத்தைத் தொன்மையான தொல்காப்பியம் தக்க வைத்துள்ளது என்பது வியப்புக்குரியதாகும்.

## திறனாய்வுக் கொள்கை

ஒரு படைப்பினை நன்கு ஆராய்ந்து, அப்படைப்பின் இயல்புகளையும், தன்மைகளையும் அலசிப்பார்த்து மதிப்பீடு செய்யும் அணுகுமுறையை 'திறனாய்வு' என்று கூறலாம். தமிழ் இலக்கிய வரலாற்றில் திறனாய்வுக்கலை தமிழர்களுக்கு மேலைநாட்டினரின் வருகையால் வந்தது என்றால் இல்லை என்றே

கூறிவிடலாம். ஓர் இலக்கியத்தின் தரத்தை ஆராய்வதும், இலக்கியம் என்பது யாது? பயன்? பணி? செம்மையான இலக்கியமா? இவை போன்ற வினாக்களைக் கொண்டு ஆய்ந்து அவற்றின் தன்மைகளை விளக்குவதற்கேற்ப விதிமுறைகளை வகுப்பது திறனாய்வு என்று ஆபர்குரோம்பி விளக்குவார். கலைஞன் எதைக் கூற முயல்கிறான்? அதில் எங்ஙனம் வெற்றி பெறுகின்றான்? அவன் கூறுவது தகுதியுடையதுதானா? இவ்வகையான வினாக்களுக்கு விடை காண்பது திறனாய்வு ஆகும் என்பார் ஸ்பிங்கான். ஒரு கலையினை நுண்ணறிவு கொண்டு உணர்ந்து அதன் தரத்தை மதிப்பீடு செய்வது திறனாய்வு என்று குறிப்பிடுகிறார் வி.டி.வின்செஸ்டர். இவ்வாறு மேலை நாட்டறிஞர்கள் கூறும் திறனாய்வுக்கான வரைமுறைகளை நோக்கும் போது, நம் முன்னோர்கள் சங்கம் வைத்து அவற்றில் நூல்களை அரங்கேற்றம் செய்யும் முறை தமிழர்களின் திறனாய்வுச் சிந்தனைக்கான சான்றாக விளங்குவது வெள்ளிடைமலை. தொல்காப்பியர் தனது நூலைச் சான்றோர்கள் அடங்கிய அவையத்தில் அரங்கேற்றியதை,

*"புறந்ததொகுத் தோனே போக்கறு பனுவல்*
*நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து"*

எனும் பனம் பாரணாரின் பாயிர வரிகள் மூலம் அறிய முடிகிறது. ஒரு நூல் அரங்கேற்றத்தின் போது சான்றோர்கள் மத்தியில் வினா எழுவதும் நூல் ஆக்கியோன் விடை பகர்வதும்... சான்றோர்கள் குழுமிய அவையம் அந்நூலுக்கும் நூலாசிரியருக்கும் சிறப்பு செய்வதும் பண்டைத் தமிழினத்தின் திறனாய்வுக் கலையை அறிய வழி வகுக்கிறது. மேலும் தொல்காப்பியர், தமிழ் இலக்கியங்கள் என்பதைச் சிறந்த ஒரு மரபுடனும் சில இலக்கிய உத்திகளுடனும் பாடியிருப்பதை உணர்த்த அவர் உள்ளத்தில் கொண்டு உயர்ந்த கவிதைக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் உருவாக்கியுள்ளார் என்பர் ச.அகத்தியலிங்கனார். தொல்காப்பியனாரின் கைவண்ணத்தில் தோன்றிய திறனாய்வுக் கொள்கைக்கான உத்தியோக நோக்கு திறனாய்வுக்கான தளத்தைப் பூர்த்தி செய்துள்ளமையைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் வழி அடையாளங் காண முடிகிறது.

**நோக்கியல் திறனாய்வுக் கொள்கை**

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அமைந்துள்ள

செய்யுளியலில் முதற்நூற்பாவில் செய்யுள் உறுப்புகளுள் நோக்கினைப் பத்தாவது உறுப்பாக அறிமுகப்படுத்தி, பின்னர்,

> *“மாத்திரை முதலாக அடிநிலை காறும்*
> *நோக்குதற் காரணம் நோக்கெனப்படுமே”*

என்னும் நூற்பாவின் மூலம் விளக்குகிறார் தொல்காப்பியர். இந்நூற்பா தொல்காப்பிய உரையாசிரியர்களினால் விவரிக்கப்பட்டு ஆய்வாளர்களால் திறனாய்வாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வ.சுப.மாணிக்கம் (வள்ளுவம்), லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார் (நோக்கு), தமிழண்ணல் (சங்க இலக்கிய ஒப்பீடு, தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் நோக்கு), ச.வே.சுப்பிரமணியன் (இலக்கணத்தொகை), இந்திரமனுவேல், சை.வை.சண்முகம் (யாப்பும் நோக்கும், ‘தூக்கு, யாப்பு–நோக்கு’ இலக்கியமும் மொழியமைப்பு), கி.இராசா (ஒப்பிலக்கியம்), இரா.மோகன் (இலக்கியப்பரல்கள், இலக்கியநுட்பம் அணிந்துரைப்பகுதி), சிற்பி பாலசுப்பிரமணியன், ப.மருதநாயகம் (சங்கச்சான்றோர் முதல் சிற்பி வரை), கா.மஞ்சுளா (நோக்குக் கோட்பாடும் சங்க இலக்கியமும்), உ.சண்முகநாதன் (நோக்கு உத்தி–ஓர் அறிமுகம்) இவை போன்ற நூல்களும் கட்டுரைகளும் நோக்கினைத் திறனாய்வுக் கொள்கையாக உணர்த்தி நிற்பது ஒப்புநோக்கத்தக்கது. தொல்காப்பியம் கூறும் ‘நோக்கு’ என்பது, ஒரு படைப்பிலனைச் சிற்றெல்லையாகிய மாத்திரை முதலாகப் பாவில் உள்ள அடிகள் யாவையும் நோக்கி மறித்து மறித்து வினா எழுப்பி விடை காணும் பொருட்டு செய்யும் திறன் ‘நோக்கு’ ஆகும். ஒரு படைப்பினை வாசிப்பாளன் மறித்து நோக்கி இன்புறுவதும் நயம் காண்பதும் நோக்காகிறது. “செய்யுளியலில் அமைந்துள்ள 34 உறுப்புகளும் கவிதையின் வடிவம், பொருள், திறன், உத்தி சார்ந்தவை என்றும் அவற்றுள் நோக்கு மேற்கண்ட மூன்றையும் சார்ந்த உறுப்பாகவுள்ளது என்றும் நோக்கினை விளக்குவார்” தமிழண்ணல். மாத்திரை முதலாக எழுத்து, அசை, சீர், அடி ஆகியவை எல்லாம் மீண்டும் மீண்டும் நோக்கிப் பயன்கொள்ளும் எண்ணம், வற்றாத அறிவின் ஊற்றாய் புதிய புதிய கருத்துக்களைத் தருபனவாய் இருத்தல் நோக்கு ஆகும். கவிதையின் (படைப்பின்) அடிக்கருத்தினை விளக்கும் பொருட்டு கவிதையில் உள்ள செய்யுளுறுப்புகள் பிறிது நோக்காது ஒன்றோடொன்று உயிர்த்தொகுப்பு கொண்டு அமைந்து துணையாக நிற்பவை ஆகும். பாடலில் காணலாகும் உறுப்புக்கள் ஒன்றையொன்று துணையாக இருக்கின்றனவா? என மறுத்துப் பார்க்கும் உத்தியைத் திறனாய்வுக்கான உத்தியாகக் காண

முடிகிறது. "ஒவ்வொரு மாத்திரையும் கூட பாடலின் பொருள் நலனை மிகுதிப்படுத்தும் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற குறிப்பை இங்கே காணலாம் என்று நோக்கினை விளக்குவார்" ப. மருதநாயகம். எனவே நோக்கு என்பது படைப்பினைத் திறனாய்வு செய்யும் முறையினைத் தெள்ளத் தெளிவாக விளக்குவதாகவே அறியமுடிகிறது. இதனை நோக்கியல் திறனாய்வுக் கொள்கையாக அடையாளப்படுத்துவது மிகவும் பொருத்தமாக அமையும்.

## முடிவுகள்

அ. தமிழர்களுக்குத் திறனாய்வுக்கலை பண்டைக்காலந்தொட்டே வளர்ச்சி அடைந்து வரும் நிலையை நோக்கியல் திறனாய்வு வழி அறிய முடிகிறது.

ஆ. படைப்பின் சிறப்பையும், செம்மையையும், தரத்தையும், திறத்தையும், நயத்தையும் நோக்கியல் திறனாய்வு வழி அறியலாம்.

இ. படிப்பாளி – படைப்பாளி எனும் இருநிலைகளையும் நோக்கியல் திறனாய்வு மூலம் விளக்கலாம்.

ஈ. மறித்து மறித்து நோக்கும் போதும், மறுவாசிப்புக்கு உட்படுத்தும்போதும் திறனாய்வுக்கான சிந்தனை ஏற்படுகிறது. இதற்கு நோக்கியல் திறனாய்வு வழிகாட்டுகிறது.

உ. இலக்கியம் சிறந்ததா? என்பதற்கும், சிறந்து வருவதற்கும் நோக்கியல் திறனாய்வு உறுதுணையாக அமைகிறது.

## குறிப்புகள்

1. லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், தொல்காப்பியச் செல்வம், ப.19.
2. ச.அகத்தியலிங்கம், தொல்காப்பியக் கவிதைகள், ப.22.
3. தமிழண்ணல், தொல்காப்பியம், மூலமும், கருத்துரையும், ப.3.
4. கண்ணதாசன், திரையிசைப்பாடல்கள் தொகுதி–2.
5. ச. அகத்தியலிங்கம், மு.நூ., ப.35
6. தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் நோக்கு, ப.13.
7. ப.மருதநாயகம், சங்கச்சான்றோர் முதல் சிற்பி வரை, ப.27.

## ஆய்வு நூல்

தா.ஏ.ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், சை.வை.சண்முகம், யாப்பும் நோக்கும் (2005).

# இலக்கிய வகை வளர்ச்சி நோக்கில் புறநானூறு, நான்மணிக்கடிகை வாழ்க்கை நெறிக்கருத்துக்கள்

முனைவர் கி. இராசா

வாழ்க்கையின் உறுதிப்பொருட்கள் மூன்றனுள் அறத்தை முதன்மையாகக் கருதியவர்கள் தமிழர்கள். அறத்தினால் பொருள் ஈட்டி அப்பொருளால் இன்பம் எய்தலாம் என உலகிற்கு உணர்த்தியவர்கள் அவர்கள். அரசர்களை வாழ்த்தும்போது அறனும் பொருளும் இன்பமும் மூன்றும் ஆற்றும் பெரும (புற 28:15–16) என்று வாழ்த்தும் மரபுடையவர்கள். உலகம் இன்பத்தின் கொள்கலம்; அழகின் ஊற்றுக்கண். அதனை நுகர்தல் வாழ்க்கைப்பேறு எனக்கருதிய அதே நேரத்தில் உலகம் நிலையில்லாதது. புகழ் ஒன்றே நிலையானது. அப்புகழை நிலைநாட்டுவதற்கு அறம் செய்வது இன்றியமையாதது என்பதை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். பெருங்காஞ்சி, முதுமொழிக்காஞ்சி, பொருண் மொழிக்காஞ்சி துறையமைந்த பாடல்கள் இதற்குச் சான்றுகள் ஆம். தொல்காப்பியத்தின் வாகைத்திணை மறத்துறைகளை அறத்துறைகளின் பாற்படுத்தும் திருப்புமையமாகத் திகழ்வதை வாகைத்திணையின் துறைகளை உற்று நோக்குவோர் உணர்வார்.

தொல்காப்பியர் வகுத்துள்ள வெட்சி. வஞ்சி, உழிஞை, தும்பை என்னும் திணைகள் மறத்தை அடிப்படையாகக் கொண்டவை, வாகைத் திணையின் பதினெண் துறைகளுள் ஒன்பது துறைகள் அறக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. வீர நிலைக்கால வாழ்வில் அமர்க்கள நோக்கு இனவாழ்வின் போக்கு என்றாலும் மறத்தில் அறப்பண்புகள் இரண்டறக் கலந்து காணப்படுகின்றன என்று பழந்தமிழர் வீரப்பண்பாட்டை ஆராய்ந்த கதிர். மகாதேவன் (ப. 192) கூறுவார். அறக்கருத்துக்களையும், மறக்கருத்துக்களையும் சமஅளவில் பெற்றுள்ள வாகைத்திணை, புறத்திணையியலின் திருப்புமையமாக அமைந்துள்ளது. இதனைத் தொடரும் காஞ்சித் திணையில் நிலையாமையை வெல்லும் பேரறமும், அமர்க்களம் சுட்டும் பேரறமும் ஆட்சி பெற்றுள்ளன. இப்பாடல்கள் அற வுரையோடு வாழ்க்கையை நல்வழிப்படுத்தும் அறிவுரைகளையும் சொல்கின்றன். வாய்மையோடு இரு குழவியைப் போல நாட்டினை

ஓம்பு, நடுவு நிலையை மேற்கொள், பரிசிலர்க்கு நல்கு, முனிவரைப்பணி, உழவரைப்பேணு, இனிய சொல்லும் எளிய செவ்வியும் கொண்டு இரு அறநெறியை மேற்கொள், முறைப்படி இறைபெறு என்பன போன்ற அறிவுரைகள் செவியறிவுறூஉ பாடல்களில் காணப்படுகின்றன என்று நா. செயராமன் குறிப்பிடுவார். இவ்வுலக வாழ்க்கைக்குரிய நல்வழிகள் கல்வி, மக்கட்பேறு, பண்பு, நட்பு ஆகியவற்றைப் பொருண் மொழிக்காஞ்சிப் பாடல்கள் கூறுகின்றன என்பார் அவர். மேலும் முதுமொழிக் காஞ்சிப் பாடல்கள், அறம் பொருள் இன்பத்தை உணர்த்தி நிலையாமை, மேல் உலகக் குறிப்புகளைக் கொண்டுள்ளன என்றும் பெருங்காஞ்சி இறப்பைக் கூறி நிலையாமையை விளக்கி அறக்கருத்தை உரைப்பது இத்துறையின் செய்தி என்றும் நா. செயராமன் குறிப்பிடுவார்.

ஆக புறநானூறு என்பது வலியுறுத்தி அல்லது மறம் போற்றும் பாடல்களின் தொகுதி என்பதைக் காட்டிலும் மறத்தோடு அறத்தையும் உணர்த்தும் பாடல்கள் என்பது பொருந்தும். மறம் போற்றும் பாடல்களோடு அறம் போற்றும் பாடல்களும் புறநானூற்றில் காணப்படுகின்றன. மறவாழ்விற்கு இணையாக அறவாழ்வு விளங்க வேண்டும் என விருப்பம் தெரிவிக்கும் பாடல்களும் அதில் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் புறநானூற்றில் அறம் நுவலும் பாடல்களை மூன்று பிரிவினதாகக் காணலாம்.

1) போர் அழிவுகளின் பின்னணியில் அறநெறியை அறிவுறுத்துதல்
2) மறத்தோடு அறத்தையும் இணையாகப் போற்றுதல்
3) மறப்புகழைக் காட்டிலும் அறப்புகழே நிலையேறுடையது என வலியுறுத்துதல்.

சங்கக்காலத்திற்குப்பின் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் சொல்லப்படும் அறங்களை இவற்றின் நீட்சியாகக் கருதலாம்.

பொதுவாகப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றிய காலத்தை அறநெறிக்காலம் என்று சொல்கிறோம். இதற்குக் காரணமாக நாம் சொல்வதெல்லாம், அந்நூல்களுள் 11 நூல்கள் அறத்தை வலியுறுத்துவதாகவும் 6 நூல்கள் அகஇலக்கியங்களாகவும் ஒரு நூல் மட்டுமே புறத்தைப்பாடுவதாகவும் அமைந்துள்ளன என்பதாகும். ஆனால் மொத்தப் பாடல்களின் எண்ணிக்கையைப்

பொறுத்தவரையில் அக-புற அறச்சார்புடைய பாடல்கள் 1520 மட்டுமே. அகமும் புறமும் பற்றிய பாடல்கள் 1730 ஆகும்.

இங்கு இன்னொரு கருத்தையும் முன்வைப்பது சாலப் பொருந்தும். அறம் என்பதை வழி அல்லது நெறி எனப் பொருள் கொண்டோமெனில் இவற்றை வாழும் வழியை அல்லது வாழ்க்கை நெறியை வலியுறுத்தும் பாடல்கள் எனலாம். இதனடிப்படையில் இவற்றை வாழ்க்கை நெறி இலக்கியங்கள் என்றும் இவை தோன்றிய காலப்பகுதியை வாழ்க்கை நெறி இலக்கியக்காலம் என்றும் எண்ணிப் பார்க்கலாம். இப்பாடல்களில் நீதி, நிலையாமை, ஒழுக்கம், கடமை, பாவம், புண்ணியம், வினைக்கோட்பாடு, விதியின் வலிமை, அறம் செய்வதால் வரும்புகழ் இவற்றோடு மன்னர் இயல்பு, அவர்தம் கடமை, ஆட்சி முறைமை, செல்வத்தின் சிறப்பு, கல்வியால் வரும் புகழ், கல்லாமையால் வரும் இழிவு ஆகியவையும் சொல்லப்பட்டுள்ளன. இவையாவும் ஏற்கனவே சங்கப் புறப்பாடல்களில் காணலாகும் கருத்துக்களின் வளர்ச்சியே என்பதை இவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பவர் அறிவர். இதனை நிறுவுதற்கு நான்மணிக்கடிகையில் இடம் பெற்றுள்ள சில பாடல்களைச் சான்று காட்டலாம்.

> "இரைசுடும் இன்புள்ள யாக்கையுட் பட்டால்
> உரைசுடும் ஒன்மை யிலாரை- வரை கொள்ள
> முன்னை ஒருவன் வினைசுடும் வேந்தனையும்
> தன்னடைந்த சேனை சுடும்" (நான். 52)

நான்மணிக்கடிகையில் ஒவ்வொரு பாடலிலும் ஒத்தக் கருத்துடைய நான்கு செய்திகள் வலியுறுத்தப்படும். இத்துறையின் பொது இயல்பு. இதற்கேற்ப இப்பாடல்கள்,

- ❑ நோயினால் வருந்தும் உடலுக்கு உணவளித்தால் அது துன்பம் தரும்.
- ❑ அறிவு விளக்கம் இல்லாதவர்களை அவர்கள் வாய்மொழியே துன்பம் செய்யும்.
- ❑ அறத்தின் பாற்படாமல் ஒருவன் செய்த முன்வினை, தீவினை இப்பிறவியில் துன்புறுத்தும்.
- ❑ அறநெறி தவறிய மன்னனை அவனது படைகளே துன்புறுத்தும்.

ஆகிய நான்கு கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்றாவதாகச் சொல்லப்பட்டுள்ள முன் வினைப்பயன் கருத்து யாதும் ஊரே யாவரும் கேளிர், எனத் தொடங்கும் புற. 192ஆம் பாடலின் விளக்கமாக அமைகிறது. ஆருயிர் முறைவழிப் படூஉம் எனும் வினைக் கோட்பாடு இப்பாடலின் மையக்கருத்தாகும். நம்கையில் ஒன்றுமில்லை எல்லாம் விதிப்படியே நடக்கும் எனும் கருத்து இப்பாடலின் அடிதோறும் வலியுறுத்தப்படுவதை இப்பாடலை ஊன்றிப் படிப்பவர் உணர்வர். நான்மணிக்கடிகையின் பாடற் கருத்துக்கு அரணாகத்தகும் வண்ணம் மேலும் மூன்று செய்திகள் நோயுற்ற உடலை உணவு துன்புறுத்தும் அறிவிலாரை அவரது வாய்ச்சொல்லே துன்புறுத்தும். அறவழிச் செல்லா வேந்தனை அவனது படைகளே துன்புறுத்தும் என அடுக்கிச் சொல்லப்பட்டுள்ளன. மேற்சுட்டிய புறநானூறுப் பாடலும் நான்மணிக்கடிகைப் பாடலும் வாழும் நெறியை வலியுறுத்து வனாய் அமைந்துள்ளன.

அறம் வலியுத்திய ஆட்சிமுறை, வினைக்கோட்பாடு ஆகியவற்றைக் காட்டிலும் கல்வியின் மேன்மையையும் கல்லாமையின் கீழ்மையையும், அறிவு பெறுதலின் சிறப்பையும், அறியாமையின் இழிவையும் பதினெண் கீழ்க்கணக்கு அற நூல்கள் பெரிதும் வலியுறுத்துவதை, இவற்றை முழுமையாக நோக்குபவர் அறிவர்.

யார் யாருக்கு எது புகழ்தரும் என்பதைப் பின்வரும் பாடல் வாயிலாக நான்மாணிக்கடிகை எடுத்துச்சொல்கிறது.

“மனைக்கு விளக்கம் மடவார் மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர் மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கும்
ஓதிற் புகல்சால் உணர்வு” (105)

இப்பாடல் இல்லத்திற்குப் புகழ் பெண்கள், பெண்களுக்குப் புகழ் புதல்வர்கள், புதல்வர்கட்குப் புகழ் கல்வி, கல்விக்குப்புகழ் கற்பதால் வரும் அறிவைப் பெறுதல் என்று கல்வியால் வரும் புகழ் பிறவற்றின் மேல்வைத்து உணர்த்தப் பெற்றுள்ளது.

இதனினும் சிறப்பாகக் கல்வியின் புகழை,

"திரியழல் காணின் தொழுப - விளக்கின்
எரியழல் காணின் இகழ்ப - ஒரு குழாய்
கல்லாத மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமையா நாட்டும் உலகு" (66)

என்று நான்மணிக்கடிகை எடுத்துச் சொல்கிறது. இப்பாடல் ஓர் அழகிய உவமை வாயிலாக வயதில் இளையவராயினும் கல்வி கற்றவராயிருப்பின் அவரை உலகோர் உவந்து பாராட்டுவர் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. விளக்கு சிறியதாயினும் அதனால் வரும் ஒளியை உலகோர் போற்றுவர்; வணங்கி மகிழ்வர். ஆயின் விறகின் தீ பெரியதாயினும் அதனை எவரும் வளர்க்க விரும்பார். அணைக்கவே முயல்வர். அதுபோல கல்வி கற்ற ஒருவன் வயதில் சிறியவனாயினும் அவனை எல்லோரும் போற்றுவர் வயதில் மூர்த்தவன் கல்லாதவனாயின் அனைவரும் மதியார். இப்பாடல்,

"ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னா தவருள்
அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்" (புற 183:5 7/6)

எனும் புறநானூற்றுப் பாடற்பகுதியின் விளக்கமாக அமைந்திருத்தல் காண்க. இவ்வாறு புறநானூற்றுப் பாடற் கருத்துக்கள் பலவற்றிற்கு விளக்கமாக நான்மணிக்கடிகை உள்ளிட்ட பதினெண் கீழ்க்கணக்கு அறப்பாடல் அமைந்திருக்கக் காணலாம்.

கருத்தை விரித்துச் சொல்லும் தன்மையில் மட்டுமல்லாது அதனை உணர்த்தும் முறையிலும் பதினெண் கீழ்க்கணக்கு அறப்பாடல்கள் வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றன. புறநானூற்றுப் பாடல்களில் துறைக்கருத்துத் தலைமைக் கருத்தாய் அமைய, அதனோடு தொடர்புடைய பிறகருத்துக்களும் சார்புக்கருத்துக்களாய் அல்லது துணைமைக் கருத்துக்களாய் அமைகின்றன. சான்றாகக் கல்வியின் சிறப்பை விளக்கும் முற்சுட்டிய புறப்பாடலையே எடுத்துக் கொள்ளலாம்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரின்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே" (புற 183)

இப்பாடலுள் கல்வியின் நான்கு சிறப்பு நிலைகள் பேசப்படுகின்றன. எப்படியாயினும் கற்றல் வேண்டும் என்பதை முதலிரண்டு அடிகள் உணர்த்துகின்றன. ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்களுள் யார் கல்வியில் சிறந்துள்ளவனோ அவனிடத்திலேயே தாயின் பாசம் செல்லும் என்பதை அடுத்த இரு அடிகள் எடுத்துச் சொல்கின்றன. வயதில் மூத்தோனாயினும் அவன் கல்லாதவனாயிருந்தால் வயதில் அவனை மதியாமல் இளையோன் கற்றறிந்தவனாயின் அவனையே மதிக்கும் என்ற கருத்தைப் பாடலின் 5-7 அடிகள் வெளிப்படுத்துகின்றன. ஒருவன் கற்றறிந்தவனாயின். அவனிடம் பிறப்பினால் கற்பிக்கப்பட்ட வேறுபாடுகள் நீங்கி பிறர் அவனைத் தொழுவர் எனும் கருத்தைப் பாடலின் இறுதி மூன்று அடிகள் சொல்கின்றன. இவ்வாறு கல்வியின் சிறப்பு இப்பாடலில் நான்கு நிலைகளில் வைத்து அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதில் ஒரு கருத்தை அதாவது ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்களுள் யார் கல்வி கற்றவரோ அவரிடத்திலேயே தாயின் பாசம் செல்லும் எனும் கருத்தை நான்மணிக்கடிகையின் 66ஆம் பாடல் வெண்பா வடிவில் விளக்கிச் சொல்கிறது. இதனை விளக்குவதற்குத் திரியழல் எரியழல் எனும் உவமைகளை முறையே கற்ற இளையோர்க்கும் கல்லா மூத்தோர்க்கும் இணையாகக் காட்டி எளிதில் மனதில் பதியவைக்கிறது. இதுபோன்று நான்மணிக்கடிகை மட்டுமின்றி திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி, இன்னாநாற்பது, இனியவை நாற்பது ஆகிய நூல்களை யாத்த புலவர்கள் தத்தம் தனித்தன்மை விளங்க சில உணர்ந்து முறைகளைப் பாடல்களில் பாடியுள்ளனர்.

புறநானூற்றுப் புலவர்கள் பாடலின் நுவல் பொருளுக்கு முதன்மை தந்து பாடப்பெற்றிருந்த பதினெண்கீழ்க்கணக்கு அறப்பாடல்கள் பாடற்பொருளோடு உணர்த்தும் உத்திக்கும் சமபங்கு அளித்துள்ளனர் என்பதைப் பாடல்களை நுண்ணிதின் நோக்குபவர் உணர்வர்.

- திரிகடுகத்தில் மூன்று கருத்துக்கள் மூன்று செய்திகளாகச் சொல்லப்பட்டுள்ளன.
- நான்மணிக்கடிகையில் ஒரு கருத்து நான்கு செய்திகள் மூலம் வலியுறுத்தப்படுகிறது.
- சிறுபஞ்ச மூலத்தில் ஐந்து கருத்துக்கள் ஐந்து செய்திகளாகச் சுட்டப்பட்டுள்ளன.
- ஏலாதியில் ஒரு கருத்து ஆறு செய்திகளாக விளக்கம் பெறுகிறது.
- இனியவை நாற்பது, செய்யக்கூடியவை இவை இவை எனப் பட்டியலிடுகிறது.
- இன்னா நாற்பது செயக்கூடாதவை இவை இவை எனப்பட்டியலிடுகிறது
- இது இப்பாடல்களின் பொதுப் போக்காகும். இதற்கு விதிவிலக்கான சில பாடல்களும் இருக்கலாம். இப் பொதுப் போக்கோடு உவமைகள், பழமொழிகள், சிலேடைகள், அணிகள், அக்கால மக்கள் பழக்க வழக்கங்கள்

ஆகியவற்றின் மூலம் சொல்ல வந்த கருத்தைப் படிப்போர் மனதில் பதியுமாறு இவை எடுத்து வைக்கின்றன.

படிப்போர் மனதில் பதியுமாறு என்று இங்குக் குறிப்பிட்டதில் பொருள் உண்டு. பதினெண்கீழ்க்கணக்கு அகப்பாடல்களாயினும் அறப் பாடல்களாயினும் அவை சங்க அகமரபையும் அற மரபையும் பின்பற்றிச் செல்வதோடு அவற்றைப் படியெடுத்தாற் போன்ற போக்கையும் காட்டுகின்றன. சங்கப் பாடல்களின் செறிவான, மனனம் செய்யுமாறும் உள்ள அமைப்பை இவை கொண்டுள்ளன. இந்நூல்களுள் பெரும்பாலானவை சமணர்கள் இயற்றியவை. குறிப்பிடத்தக்கவர்கள் என்பதைக் கல்வி வரலாறு காட்டுகிறது. கல்வி என்பது எழுதப்படிக்கத் தெரிந்த ஒரு சிலருக்கே உரியதான எழுத்துக்கல்வியாக இருந்த நிலையில் அதனைக் கேட்டற் கல்வியாக

மாற்றி கல்வியை அனைவர்க்கும் பொதுமைப்படுத்திய சிறப்பு சமணர்க்கு உரியது.

இந்தப் பின்னணியில் எழுந்த பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்கள், கல்வியுடன் கூடிய வாழ்க்கை நெறிகளை மாணாக்கர்க்கும், மக்களுக்கும் உரைக்கத் தலைப்பட்டனர். மாணாக்கர்களும் மக்களும் எளிதில் மனங்கொள்ளத்தக்கவாறு குறுகிய அடிகளாய் ஆகிய அழகிய பாக்கள் வாயிலாகக் கல்வி உள்ளிட்ட வாழ்க்கை நெறிகளை அவர்கள் ஆசிரியப் புலவர்களாகி உரைத்தனர். ஏற்கனவே பழந்தமிழ் நூல்களில் சொல்லப்பட்ட கருத்துக்களை உள்வாங்க அவற்றின் அடிப்படையில் சிறுசிறு பாக்களாகவும் அப்பாக்களில் உள்ள செய்திகளை மனதில் இருத்துமாறு புதியவடிவமும் உத்தியும் கொண்டு பாடமோதினார்.

1950-60களில் பள்ளிகளில் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி போன்று ஓரடி, ஈரடி அறநெறிப்பாடல்களை இளஞ்சிறார்கள் மனப்பாடம் செய்து நாள்தோறும் ஓதிவந்தனர். காலங்காலமாகச் சொல்லப்பட்டு வந்த கருத்துக்களைச் சிறிய அமைப்பும் சீரிய பொருளும் கொண்டு வாய்விட்டுப் படிப்பதற்கும் எளிதில் நினைவு கொள்வதற்கும் இவை வாய்ப்பாக இருந்தன. இதே நிலையில் சங்கம் மருவிய காலத்திலும் பழந்தமிழ் இலக்கிய வாழ்வியல் நெறிகளை மாணவர்க்கும் மக்கட்கும் எளிமைப்படுத்தித்தரும் முயற்சியில் இவ்வாசிரியர்கள் ஈடுபட்டு அதில் வெற்றியும் பெற்றார்கள். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் காணப்படும் சங்க அகக்கருத்துக்கள், அறக்கருத்துக்களின் வளர்ச்சித் தொடர்ச்சி இந்த உண்மையை நமக்கு உணர்த்துகிறது.

**குறிப்பு :**

1. கதிர். மகாதேவன், பழந்தமிழர் வீரப்பாண்பாடு, லெட்சுமி வெளியீடு, மதுரை, 1980.

2. நா. செயராமன், சங்க இலக்கியத்தில் பாடாண் திணை, மீனாட்சி புத்தகநிலையம், மதுரை, 1975.

3. கோ.பழனிவேலு, தமிழர் கல்வி வரலாறு (முனைவர் பட்ட ஆய்வு)

# தமிழ் இலக்கியத்தில் அன்புநெறி

பேராசிரியர் பா.வளன் அரசு

## 1. முன்னுரை

பன்னீராயிரம் ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியம் புகழுடன் திகழ்வதாகத் தெரிவிக்கிறது தமிழ் இலக்கிய வரலாறு. உலகப் பொது மறையாகவும் பாரத மணித் திருநாட்டின் தேசிய இலக்கியமாகவும் ஏற்றுப் போற்றத்தக்கது திருக்குறள். ஓராயிரத்து முந்நூற்று முப்பது வெண்பாக்கள் கொண்ட முப்பால் ஆகிய திருக்குறள், எழுபத்தொன்று எழுத்துகளில் தொடங்குகிறது; நாற்பத்தேழு எழுத்துக்களில் முடிகிறது. உகை முதல் உப்பு முடிய முந்நூற்று இருபத்து நான்கு ஈற்றுச்சீர்கள் திருக்குறளில் அமைந்துள்ளன. அறம், பொருள், இன்பம் என்ற முத்திற வாழ்வுக்கும் எத்திறத்தாலும் வழிகாட்டுவது திருக்குறள் என்பார் மூதறிஞர் வ.சுப. மாணிக்கம். திருக்குறளில் "பொய்தீர் ஒழுக்க நெறி" (6), "கொல்லாமை சூழும் நெறி" (324), "மற்றீண்டு வாரா நெறி" (356), "பொருள் போற்றி வழங்கும் நெறி" (477) ஆகிய நான்கும் நவிலப்பட்டுள்ளன. அனைத்துக்கும் நடுநாயகமாக "அன்பின் வழியது உயர்நிலை" (80) என்று தெளிவுறுத்துகிறார் திருவள்ளுவர். "அன்பு" என்று தொடங்கும் குறட்பாக்கள் பதினாறு (45, 71, 72, 73, 74, 75, 78, 80, 513, 681, 682, 862, 911, 983, 992, 1009). அன்பும் அறனுமே பண்பும் பயனுமாக விளங்க வலியுறுத்துகிறார் வள்ளுவர். உலக வாழ்வின் இயல்பான பண்பு அன்பாகும். அன்பின் பயனே அறநெறி ஆகும். வள்ளுவர் முதல் வைரமுத்து வரை காலந்தோறும் புலவர் பெருமக்கள் தங்கள் விழுமிய எழுத்தோவியங்களாகிய இலக்கியங்களில் அன்பு நெறியினை எடுத்தியம்பியுள்ளனர்.

## 2. திருக்குறள் போற்றும் அன்பு நெறி

'உலகின் எழுத்தோவியம் திருக்குறள்' என்று போற்றிய தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் திருவள்ளுவரையும் திருமூலரையும் எல்லோருக்கும் பேரளவில் அறிமுகம் செய்து வைத்த பெருமைக்கு உரியவராவார்; அதற்கு அடிப்படையாக அமைபவை திருக்குறளில் உள்ள ஒன்பது அதிகாரங்களின் சிறப்புமிகு சிந்தனைகளாகும். இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், பிறனில் விழையாமை, பெண் வழிச்சேறல், வரைவின் மகளிர் ஆகிய அனைத்துக்கும் உயிர்நாடியாக விளங்குவது அன்பு.

மனிதராகவும் மனித நேயம் மிக்கவராகவும் வாழச் செய்பவை இலக்கியங்கள் மாமனிதராகவும் சான்றோராகவும் உருவாக்க வல்லது திருக்குறள். ஆம் சான்றாண்மை என்னும் மாளிகையின் ஐந்து தூண்களாகப் போற்றப்படுபவை அன்பு. நாணம். பிறர் நலம். பரிவு. உண்மை ஆகியவையாம்.

"அன்பு நாண், ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
ஐந்து சால்(பு) ஊன்றிய தூண்" *(983)*

பணிபுரிவோரைத் தெரிந்து தேர்ந்திடும் மேலாண்மை மிக்கோர் அன்பும் அறிவும் தெளிவும் பேராசையின்மையும் அமைந்தவரையே ஏற்றுப் போற்றுவர்.

"அன்(பு) அறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு" *(513)*

### 3. குறுந்தொகை காட்டும் அன்புநெறி

கல்வியின் பெருமையினைப் புலப்படுத்தும் திருவள்ளுவர் அதற்காக ஐம்பத்தொரு குறட்பாக்களை நல்கியுள்ளார். நட்பின் சிறப்பிற்காக நூற்று எழுபத்து ஒன்று குறட்பாக்களை வழங்கியுள்ளார். தலைவன் தலைவியின் பேரன்பைப் பறைசாற்ற நட்பு என்னும் சொல்லையே பயன்படுத்தியுள்ளார்.

"உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு" *(1122)*

குடும்பத் தலைவன் தலைவியிடம் காட்டும் அளப்பரிய அன்புக்கு அளவுகோல் கூறும் பாங்கு குறுந்தொகையுள் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது. அன்பு நெஞ்சங்களின் கலப்பால் உலகை விடப் பெரியதாதவும் வானை விட உயர்ந்ததாகவும் கடலைக் காட்டிலும் ஆழம் உடையதாகவும் நட்பு திகழ்கிறதாம்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவு இன்றே சாரற்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (3)

அன்பின் ஆழத்தையும் அகலத்தையும் உயரத்தையும் ஆங்கில பாவலர் இராபர்ட்டு பிரௌனிங் சுட்டுவது ஒப்புநோக்கத்தக்கது. (" I Love thee to the depth, and breath and height")

### 4. திருமந்திரம் தெளிவுறுத்தும் அன்புநெறி

ஐந்தாம் நூற்றாண்டினரான அருளாளர் திருமூலர் அருளிய திருமந்திரம் இறைவனையே அன்பின் வடிவமாக ஏற்றுப் போற்றுகிறது. "அன்பே சிவம்" (257) என்றும், "அன்பின் உள்ளாகி அமரும் அரும்பொருள் அன்பின் உள்ளார்க்கே அணைதுணையாமே!", (266) என்றும் எடுத்தோதுவது எண்ணி மகிழ்தற்கு உரியதாகும். நாவரசர் தேவாரத்துள்ளும் இத்தகைய அன்பின் பெருக்கைக் கண்டு உணரலாம்.

"அத்தா உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்
அருள்நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியை நீ எளியை ஆனாய்" *(936)*

வள்ளலாரின் திருவருட்பா இதனை மேலும் மெருகேற்றி மொழிகிறது.

"அன்பெனும் அணுவுள் அமைந்தபேர் ஒளியே
அன்புருவாம் பரசிவமே" *(3269)*

விவிலியத் திருநூலில் யோவான் அருளிய நற்செய்தி இறைமகன் இயேசு பெருமான் இயம்பியதாகத் தெரிவிக்கும் வாழ்வியல் நினைந்து போற்றற்கு உரியதாகும்.

"நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல
நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்"
*(13:34)*

தாயுமானவரின் பராபரக் கண்ணியுள்

"அன்பைப் பெருக்கி எனது ஆருயிரைக் காக்க வந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே" *(14)*

என்று உருக்கப் பெருக்கத்தோடு இறைவன் போற்றப்படுகிறான்.

### 5. சமயச் சான்றோரும் அன்புநெறியும்

இறையன்பு கொள்பவர் பிறரன்பு மிக்கவராகவும் மிளிர வேண்டும். தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதாகும் என்பார் ஔவையார். அறுபத்து மூன்று திருத்தொண்டராம் நாயன்மாரின் வரலாறு கூறும் சேக்கிழார் தொண்டர்களின் தனிப்பெருமைக்கு இறையன்பே அடிப்படை என்பார்.

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்"
(பத்தராய்ப் பணிவார், 7)

இராமகாதையினை இயற்றிய கம்பர் பெருமான் அன்பின் அடிப்படையிலேயே ஆக்கம் அனைத்தும் அமையும் என்கிறார்.

"என்பு தோலுடை யார்க்கும்இ லார்க்கும்தம்
வன்ப கைப்புலன் மாசற மாய்ப்பதென்
முன்பு பின்பன்றி மூவுல கத்தினும்
அன்பின் அல்லதோர் ஆக்கம் உண்டாகுமோ?"

அன்பு என்பது தூய உள்ளத்திலிருந்து தோன்றுவது. இறைவனும் அவன் சாயலாக அமையும் அனைவரும் ஏற்றுப் போற்றுவது அன்பையே என்பார் பிரபுலிங்க லீலை ஆசிரியர் :

"ஆசறு மனத்தெழும் அன்பை யன்றியே
பூசனை உவக்கிலன் புராரி சென்னிமேல்
வீசறு திரையினும் மிக்க தோசொலாய்
ஊசல்செய் மனமுடை யொருவ னாட்டுநீர்"

இறைவனுக்குச் செய்யும் பலி முதலாய சடங்குகளை விடப் பிறருக்குச் செய்யும் பரிவுடன் கூடிய அன்பே மேலானதாகும். பன்னிரெண்டு நூற்பாக்களில் சிவஞானபோதம் அருளிய மெய்கண்டார், இறைவனைத் திருக்கோவிலில் மட்டுமன்றி அன்புத் தொண்டாற்றும் அடியார் உள்ளத்திலும் காணலாம் என்கிறார்.

"செம்மலர் நோன்றாள் சேர வொட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே" (12)

செல்வம் எல்லாம் பெற்றிருந்தாலும், அன்பில்லாதவன் உலகில் மதிக்கப்படமாட்டான் என்னும் வள்ளுவக் கொள்கை,

"அன்புற்(று) அமர்ந்த வழக்கென்ப வையகத்(து)
இன்புற்றார் எய்தும் சிறப்பு "(75)

என்னும் திருக்குறளால் தெரிவிக்கப்படுகிறது. உலகில் இனிமையாக வாழ்வோர் அடையும் நலன்கள் அனைத்தும் அன்பில் நிலைபெற்ற பயன்கள் ஆகும். இக்கருத்தையே வழிமொழிந்துள்ளார் நன்னெறி

நூலாசிரியர். வாய்பேசவியலாத ஊமையர்க்குப் பழம்பெரும் நூல்களால் பயனில்லை. பார்வையற்றவர்க்கு விளக்கு ஒளியினால் பயன் இல்லை. அது போன்று அன்பில்லாதவர்க்கு இடம், பொருள், ஏவல் ஆகிய அனைத்தும் அமைந்திருந்தாலும் பயன் எதுவும் இல்லையாம்.

"இல்லானுக்(கு) அன்பிங்(கு) இடம்பொருள் ஏவல்மற்(று)
எல்லாம் இருந்தும் அவற்(கு) என்செய்யும் - நல்லாய்
மொழியிலார்க்(கு) ஏது முதுநூல் தெரியும்
விழியிலார்க்(கு) ஏது விளக்கு"

6. கலம்பகமும் அன்புநெறியும்

இலக்கிய வகையுள் சிறப்பிடம் பெறுவது கலம்பகம். சாமிநாதர் எழுதிய நசரைக் கலம்பகம் இயேசு பெருமானைப் பாட்டுடைத் தலைவராக்கிப் பாடப்பெற்றுள்ளது. பதினெட்டுத் துறையுள் ஒன்றாகிய ஊசல் வாயிலாக அன்புநெறியே வாழ்வின் தூணாக விளங்க வலியுறுத்துகிறது.

"இன்பமென உலககுகம் தன்னைத் தேடி
எந்நாளும் அலையும்மனத்(து) இகழ்வுண் டாக
அன்புநிலைக் கம்பமாய் அசையா நாட்டி
அரியமறை விட்டமாய் அணைத்துக் கட்டிப்
பின்புநல முறைமையெலாம் கயிறாய்ச் சேர்த்துப்
பேரறமேபலகையாய்ப் பெயராப் பூட்டித்
துன்பறவே நசரை மன்னா ஆடீர் ஊசல்
தொல்லுலகோர் கதியுறவே ஆடீர் உசல்"

உலகமீட்புக்காக நசரேனாகிய இயேசுவை ஊஞ்சல் ஆடி மகிழ்விக்க வேண்டுவது குறிப்பிடத்தக்கது. சுத்தானந்த பாரதியார் இயேசுவை முன்னோடியாகக் கொண்டு அனைவரும் அன்புசெய்யத் தூண்டுகிறார்.

## ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**

**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**

**மதுரை–625001.**

தொலைபேசி : 0452-6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : நலம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No.: 5508/56 August 2009


# செந்தமிழ்க் கல்லூரி
## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசிய தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் தேசிய தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.
**54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 1.**
**தொலைபேசி 0452-2343707. நிகரி 0452-4373475**

**2009 - 2010க் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது.**

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.எ., பி.லிட்., எம்.எ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன.**

| இரா. அழகுமலை | முனைவர் க. சின்னப்பா | இரா. குருசாமி |
|---|---|---|
| செயலாளர் | முதல்வர் | செயலாளர் |
| மதுரைத் தமிழ்ச் சங்கம் | செந்தமிழ்க் கல்லூரி | செந்தமிழ்க் கல்லூரி |


அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V.Govindarajan, published by R.ALAGUMALAI on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West masi Street, Madurai-1, and published at 54, Tamil sangam road, Madurai. Editor R. ALAGUMALAI.